# சிலாங்கூர்

இன்று இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / பிலவ வருடம் பங்குனி மாதம் / மார்ச் 3 / 2022 March 3/2022


# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 72,451 நபர்களுக்கு சிலாங்கூர் அரசின் உதவி

கடந்தாண்டு டிசம்பர் மாதம் சிலாங்கூரில் ஏற்பட்ட மோசமான வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 72,451 பேர் மாநில அரசின் 1,000 வெள்ளி உதவித் தொகையைப் பெற்றுள்ளனர் என்று 21ந்தேதி காலை 10.00 மணி வரை பதிவான எண்ணிக்கையைக் குறிப்பிட்டார். பந்துவான் சிலாங்கூர் பங்கிட் (பி.எஸ்.பி.) திட்டத்தின் கீழ் வெள்ள நிவாரண நிதி வழங்குவதற்காக இதுவரை 7 கோடியே 25 லட்சத்து 81 ஆயிரம் வெள்ளி செலவிடப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

வெள்ளத்தில் உயிரிழந்த 13 பேரின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட 130,000 வெள்ளி உதவி நிதியும் இதில் அடங்கும் என்று இன்று சமூக ஊடகங்கள் வழி வெளியிட்ட விளக்கப்படத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிள்ளானில் அதிகமாக உதவி நிதியைப் பெற்றுள்ள வேளையில் அதற்கு அடுத்த நிலையில் பெட்டாலிங் மாவட்டத்தில் 16,917 பேருக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

கோல லங்காட்டில் 10,282 பேரும் உலு லங்காட்டில் 7,834 பேரும் சிப்பாங்கில் 6,878 பேரும் கோலச் சிலாங்கூரில் 5,915 பேரும் கோம்பாக்கில் 1,042 பேரும் உலு சிலாங்கூரில் 94 பேரும் சபா பெர்ணமில் 40 பேரும் இந்த உதவி நிதியைப் பெற்றுள்ளனர்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மாநில அரசு கடந்தாண்டு டிசம்பர் மாதம் பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தை தொடக்கியது. இத்திட்டத்தின் கீழ் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 1,000 வெள்ளியும் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா 10,000 வெள்ளியும் வழங்கப்படுகிறது.



## கிள்ளான் வட்டாரத்தில் 53,825 நபர்களுக்கு வெள்ள உதவி நிதி !

பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ்ப் பிப்ரவரி மாதம் 24 வரை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கிள்ளான் வட்டாரத்தைச் சேர்ந்த 53,825 பேர் 1,000 வெள்ளி உதவி நிதியைப் பெற்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் 28 ஆம் தேதி முதல் மாநில அரசின் இந்த உதவி நிதியைப் பெற்றவர்கள் எண்ணிக்கை இதுவாகும் என்று கிள்ளான் மாவட்ட அதிகாரி முகமது பைசால் அப்துல் ராஜி கூறினார்.

பண்டமாரான் விளையாட்டுத் தொகுதி, ஜாலான் காப்பார் டி.என்.பி. மண்டபம், கிள்ளான் நில மற்றும் மாவட்ட அலுவலகத்தின் பல்நோக்கு மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிதி பகிர்ந்தளிப்பின் போது மேலும் 7,600 பேர் நிதியைப் பெற்றனர் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதி வழங்கும் நிகழ்வு முடிவுக்கு வந்துவிடவில்லை. நிதியை இன்னும் பெறாதவர்களுக்காக நில மற்றும் மாவட்ட அலுவலகத்தில் சிறப்பு நிதியளிப்பு நிகழ்வு நடத்தப்படும் என்றார் அவர்.

தங்கள் வங்கி கணக்கிற்கு உதவி நிதி மாற்றப்படுவதற்கு ஏதுவாக வங்கி கணக்கு எண்களைச் சேகரிப்பதன் மூலம் விண்ணப்பத்தைப் புதுப்பித்துக் கொள்ளும்படி பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

# துன்பத்தில் கைகொடுத்த பங்கிட் சிலாங்கூர் துயர் துடைப்பு நிதி

ஷா ஆலம்:–

கிள்ளான் மாவட்டம் மற்றும் ஷா ஆலமில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர்களுக்கு நேற்று , பங்கிட் சிலாங்கூர் உதவி (BSB) RM1,000 வழங்கப்பட்டது.

MBSA கெமுனிங் உத்தாமா மண்டபம், ஜலான் காப்பார் TNB கீலாட் மண்டபத்திலும், கோலக்கிள்ளான் பண்டமாரன் விளையாட்டு வளாகம் மற்றும் மேரு ஸ்ரீ கொராயோங் மண்டபங்களிலும் இந்த உதவி நிதி வழங்குதல் நடைபெற்றது.

வரலாறு காரணாத வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தங்களுக்கு பந்துவான் சிலாங்கூர் பங்கிட் (பி.எஸ்.பி.) திட்டத்தின் கீழ் 1,000 வெள்ளி உதவி நிதி வழங்கிய மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக நிதியுதவி பெற்றவர்கள் நெகிழ்ச்சியுடன் கூறினர். இந்த உதவி நிதி தங்களின் நிதிச்சுமையை ஓரளவு குறைப்பதில் துணை புரிந்ததாகக் கூறிய அவர்கள், பழுதடைந்த வீட்டை சரி செய்வதற்கும் வாடகை மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கும் இத்தொகையை பயன்படுத்தியாக குறிப்பிட்டனர்.

## திருமதி. அ.நந்தினி தரை வீட்டில் எதனையும் காப்பாற்ற முடியவில்லை



இந்த வெள்ளத்தில் வீட்டிலுள்ள ஒரு பொருளையும் மீட்க இயலாத நிலையில் அவசரமாக வெளியேறி உறவினர் வீட்டில் அடைக்கலம் புகுந்ததாக கிள்ளான், டேசா கெமுனிங்களைச் சேர்ந்த திருமதி அ.நந்தினி (வயது 53) கூறினார்.

மூன்று தினங்களுக்குப் பிறகு வெள்ளம் வடிந்து வீடு திரும்பிய போது மின்சாரப் உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள் ஒரு கார், இரு மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட அனைத்து பொருள்களும் முற்றாக சேதமடைந்தன. எங்கள் வீடு தரை வீடாக இருந்த காரணத்தால் எந்த பொருளையும் காப்பாற்றுவதற்கு அறவே வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. முற்றிலும் புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ள எங்களுக்கு மாநில அரசின் இந்த நிதியுதவி ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்தது. இந்த நிதியைக் கொண்டு வீட்டு வாடகையைச் செலுத்தியதோடு வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருள்களையும் வாங்கினோம். அவர்களுக்கு நிதியுதவி விரைந்து கிடைக்க அரசாங்கம் உதவ வேண்டும் என்று திருமதி நந்தினி கேட்டுக் கொண்டார்.

## ஜோசுவா ஸ்டீவன் வீட்டில் மின்சார வயர்களை மாற்ற உதவி

இந்த வெள்ளச் சம்பவத்தில் தங்களுக்கு 50,000 வெள்ளி வரை இழப்பு ஏற்பட்டதாக தாமான் ஸ்ரீ மூடாவைச் சேர்ந்த ஜேசுவா ஸ்டீவன் (வயது 25) கூறினார். வெள்ள நீர் அதி விரைவாக உயர்ந்து கொண்டு வந்ததால் எந்த பொருளையும் காப்பாற்ற முடியவில்லை. மேலும் தரை வீடு என்பதால் எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் பொருள்களைப் பாதுகாப்பதற்கும் வாய்ப்பே இல்லாது போய்விட்டது என்று அவர் சொன்னார்.

வெள்ள பாதிப் பிலிருந்து மீள்வதற்கு உதவிய சிலாங்கூர் அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிதி வீட்டில் மின்சார வயர்களை மாற்றுவதற்கு துணை புரிந்தது. வெள்ளத்தில் குவிந்த குப்பைகளை விரைந்து அகற்றியதற்காக கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

## கே. பெரியசாமி சேதம் 50,000 வெள்ளியைத் தாண்டும்



இந்த மோசமான வெள்ளத்தில் தனது வீடு சுமார் எட்டு அடி வெள்ளத்தில் மூழ்கியதாக இங்குள்ள செக்சன் 25, தாமான் ஸ்ரீ மூடாவைச் சேர்ந்த கே.பெரியசாமி (வயது 71) கூறினார். வழக்கம் போல் வெள்ளம் சில அடி உயர்ந்து வடிந்து விடும் என்று எண்ணி சில பொருள்களை மட்டும் மேல் மாடியில் வைத்து விட்டு மற்றவற்றை பிளாஸ்டிக் பைகளில் கட்டி மேசைகள் மீது வைத்திருந்தோம். நீர் மட்டம் துரிதமாக உயர்ந்த காரணத்தால் பிள்ளைகளின் பாதுகாப்பு கருதி உடனடியாக வீட்டிலிருந்து வெளியேறி கிள்ளான் மற்றும் கிளானா ஜெயாவிலுள்ள உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்தோம் என அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம் வடிந்து வீடு திரும்பிய போது வீட்டின் கீழ்த்தளத்தில் இருந்த தளவாடங்கள் மின்சார சாதனங்கள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களும் பயன்படுத்த முடியாத அளவுக்கு முற்றாக சேதமடைந்திருந்தை வேதனையுடன் சொன்னார்.

இந்த இக்கட்டான சூழலில் மாநில அரசு 1,000 வெள்ளியை வெள்ள நிவாரண நிதியாக வழங்கியது எங்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. இந்த தொகையைக் கொண்டு மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்தோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஷெடா ரோசெலி, 44



MBSA கெமுனிங் மண்டபத்தில் சிலாங்கூர்கினி எடுத்த செய்திப்படி அடிப் படையில், சராசரி பெறுநர் உதவியைப் பெற மதியம் 2 மணிக்கே வரிசையில் நிற்கத் தொடங்கி விட்டனர். உதவி பெற்றவர்களில் ஒருவரான ஷெடா ரோசெலி, 44, வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட மற்றவர்களை விடச் சிறிது தாமதமாக உதவி கிடைத்தாலும் விண்ணப்பம் இறுதியாக வெற்றியடைந்ததாகத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

“தாமதமாகக் கிடைத்து இருந்தாலும், உதவியின் மதிப்பு ஏற்பட்ட இழப்புக்குச் சமமாக இல்லாவிட்டாலும் நான் நன்றியுடன் இருக்கிறேன்.

“குறைந்த பட்சம் பழுதடைந்த காரைச் சரிசெய்யவும், குழந்தை களுக்குப் பள்ளி உபகரணங் களை வாங்கவும் எங்களால் முடிந்தது,” என்று ஆறு சிறு குழந்தைகளைக் கொண்ட அவர் கூறினார்.

## டான், 61



மற்றொரு பிஎஸ்பி பெறுநர் 61 வயதுடைய டான் தன் நன்றியைத் தெரிவித்ததோடு இன்றைய விநியோகச் செயல்முறையை விரைவாகவும் எளிதாகவும் நடைபெற்றதனைப் பற்றி விவரித்தார்.

“நான் வயது மூத்தவர் என்பதால் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. வெள்ளத்தால் வீட்டில் ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்ய இந்தப் பணம் கொஞ்சம் உதவும்” என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி பல மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து பிஎஸ்பி திட்டம் தொடக்கத்திற்காக மாநில அரசு RM10 கோடி வழங்கியது. இந்த மோசமான வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதற்காக மாநில அரசு பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் 10 கோடி வெள்ளியை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 1000 வெள்ளியும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10,000 வெள்ளி வழங்கப்படுகிறது.

## எஸ் மரதமுத்து, 69



இதற்கிடையில், 69 வயதான எஸ் மரதமுத்து, தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றியதற்காகவும், தொடர்ந்து நன்கொடைகளை வழங்கியதற்காகவும் மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கு நன்றி தெரிவித்தார்.கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு கறுப்பு வரலாறு என்ற அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார், 30 ஆண்டுகளுக்கும் மேலாகக் கெமுனிங் உத்தாமாவில் வாழ்ந்தாலும், ஒவ்வொரு முறை மழை பெய்யும்போது அவரும் அவரது மனைவியும் மிகவும் பயத்தில் உள்ளனர். “முதன்முறையாக வெள்ளம் மிகவும் கடுமையானது, கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களும் சேதமடைந்தன, கடந்த ஆண்டைப் போல இனி எந்த நிகழ்வுகளும் இருக்காது என்று நம்புகிறேன்,” என்று அவர் கூறினார்.



# சிலாங்கூரில் கல்வி மேம்பாட்டுக்கு 3 சக்திவாய்ந்த திட்டங்களை

## மாநிலரசு செயல்படுத்தி வருகிறது.

சிலாங்கூர் மாநில அரசு குறிப்பாக சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு பல்வேறு முயற்சிகளைச் செயல்படுத்தி வருகிறது. இந்த முயற்சியில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த (B40) புதிய மாணவர்களுக்கு இல்திசம் மஹாசிஸ்வா என்ற பள்ளி உயர்நிலை கல்விக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு RM1,000 உதவியும் அடங்கும். சிலாங்கூர் உதவித்தொகை நிதி மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்படிப்புகளுக்கு மாறக்கூடிய கடன்கள் மற்றும் ஒரு வருடத்திற்கான இலவச இணையத்துடன் கூடிய சிம் கார்டுகளும் வழங்கப்படுகிறது.

# சிலாங்கூரில் 637 சீன, தமிழ் மற்றும் சமயப் பள்ளிக்கு நிதி

**சிலாங்கூரிலுள்ள 95 தமிழ்ப்பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு மாநில அரசு 49 லட்சம் வெள்ளியை மானியமாக வழங்கியது.**

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 637 சீன, தமிழ் மற்றும் சமயப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசு ஒதுக்கியுள்ள சுமார் 2 கோடியே 40 லட்சம் வெள்ளித் தொகையில் தமிழ்ப்பள்ளிகளுக்கான இந்த ஒதுக்கீடும் உண்டு.

'சிலாங்கூர் மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்துவதோடு, அனைத்துச் சமூகத்தினருக்கும் கல்வி நிகழ்ச்சி நிரலுக்கு முன்னுரிமை அளிக்கிறது என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று ட்விட்டரில் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட சிலாங்கூர் 2022 பட்ஜெட்டில் **RM234** கோடி ரிங்கிட் மற்றும் **RM 112** கோடி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது.

மாணவர்கள், பெண்கள், **B40**, மாற்றுத்திறனாளிகள், தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகள் உட்பட அனைத்துக் குழுக்களுக்கும் பட்ஜெட் நன்மை பயக்கும், சுகாதாரம், கல்வி, தொழில், வணிகம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது.

# மக்களுக்கு கல்வித் திட்டங்களை செயல்படுத்த ஒவ்வொரு ஆண்டும்

## வெ.7.8 கோடி ஒதுக்கீடு மந்திரி புசார்

பெட்டாலிங் ஜெயா:–

மக்களின் எதிர்கால திசை நோக்கிய கல்வித் திட்டங்களின் வெற்றிக்காக மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் 7.8 கோடி வெள்ளி ஒதுக்கி வருகிறது.

மதம், இனம் மற்றும் நிறம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து சமூகத்தினருக்கும் இந்த உதவி வினியோகிக்கப்பட்டது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார். சீன தனியார் பள்ளிகளும் விதிவிலக்கல்ல, ஏனெனில் கல்வி அனைவருக்கும் முன்னுரிமை மற்றும் முக்கியமானது என்று டத்தோ 'ஸ்ரீ அமிருடின் ஷாரியின் கூறினார்.

2016 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் இந்த தனியார் பள்ளியின் உத்தரவாதத்திற்கும் [தொடர்ச்சிக்கு] RM500,000 வழங்குகிறோம்.

'நாங்கள் சீனப் பள்ளிகளுக்கு மட்டும் உதவுகிறோமா? இல்லை. 405 சமய ஆரம்ப பள்ளிகள், 114 க்கும் மேற்பட்ட சீன தேசிய வகை ஆரம்ப பள்ளிகள் மற்றும் 90 க்கும் மேற்பட்ட தமிழ் ஆரம்ப பள்ளிகளுக்கு உதவ எங்களிடம் 2.4 கோடி வெள்ளி உள்ளது,சுஎன்று நேற்றிரவு சீன புத்தாண்டு 2022 கெஅடிலான் கட்சி விருந்தில் கூறினார். மேலும் கெஅடிலான் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மற்றும் கட்சி தலைமையும் கலந்து கொண்டது. மாநில மக்களுக்கு அனைத்து உதவி செயல்முறைகளும் ஆதரவு வடிவங்களும் முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமைக்கு ஏற்ப வழங்கப்பட்டதாக அமிருடின் கூறினார்.

'எங்கள் உதவி தேர்தலுக்கு மட்டுமல்ல. அனுதாபத்தை ஈர்ப்பதற்காக அல்ல,ஆனால் திசையைப் பின்பற்ற வேண்டும். நாங்கள் சிலாங்கூர் குடும்பம். அனைவருக்காகவும் செயல்படுகிறோம்.




நான் மந்திரி புசாராக நியமிக்கப்பட்ட போது, தலைமை [கெஅடிலான்] எனக்கு அறிவுரை வழங்கியது, அனைவருக்கும் மந்திரி புசாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும், சுஎன்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பரில், அமிருடின் மாநிலத்தில் உள்ள 637 பள்ளிகளின் உள்கட்டமைப்புக்கு உதவுவதற்காக RM2.4 கோடி நிதியை வழங்கினார். இந்த தொகையில் அகாமா ஆரம்ப பள்ளிக்கு RM98 லட்சம் (SRA), சீன தேசிய வகை ஆரம்ப பள்ளிக்கு RM90 லட்சம் மற்றும் தமிழ் ஆரம்ப பள்ளிகளுக்கு RM45 லட்சம் நிதியை உள்ளடக்கியது.




# ஊக்க தடுப்பூசியை உடனடியாக பெற்றுக் கொள்ளுங்கள்

## மந்திரி புசார் அறிவுறுத்து

ஷா ஆலம்:–

சினோவாக் தடுப்பூசியைப் பெற்ற சிலாங்கூர் மாநில மக்கள் மார்ச் 1 ஆம் தேதிக்கு முன் பூஸ்டர் எனப்படும் ஊக்க தடுப்பூசியை எடுக்க வேண்டும் என்று டத்தோ மந்திரி புசார் நினைவுபடுத்தினார்.

சினோவேக் தடுப்பூசி பெற்றவர்கள் மார்ச் 1 ஆம் தேதிக்கு முன் ஊக்க தடுப்பூசியை எடுக்கவில்லை என்றால் அவர்களின் தடுப்பூசி சான்றிதழ் ரத்து செய்யப்படும் என்று மலேசிய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

'சிலாங்கூர் குடியிருப்பாளர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினர் பாதுகாப்புக்காக உடனடியாக ஒரு ஊக்க தடுப்பூசியைப் பெற நினைவூட்ட படுகிறார்கள்,சு என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று பேஸ்புக்கில் கூறினார். பிப்ரவரி 7 அன்று, சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின், 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சினோவாக்கின் முழு அளவைப் பெறுபவர்கள் முழுமையான தடுப்பூசி நிலை பராமரிக்க மார்ச் 1 ஆம் தேதிக்கு முன் ஊக்க தடுப்பூசியை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அவ்வாறு செய்யத் தவறினால், தடுப்பூசி பெற்றதற்கான தகவல் மைசெஜாத்ரா செயளி பயன்பாட்டு சான்றிதழ் முழுமையடையாத தாகக் கருதப்படும் என்று முன்பு சுகாதார அமைச்சர் கூறியதை நினைவுறுத்தினார்.



### 2030க்குள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியை

# 33.3 விழுக்காடாக நிலை நிறுத்த திட்டம்

ஷா ஆலம் :-

வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் சிலாங்கூரிலுள்ள 33.3 விழுக்கட்டுப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக நிலை நிறுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது. தற்போது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 32.5 விழுக்காடு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக உள்ளதாக சுற்றுச் சூழல் மற்றும் பசுமைத் தொழிநுட்பத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

மாநிலத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் குறையாமலிருப்பதை உறுதி செய்யும் அதே வேளையில் அதன் அளவை உயர்த்தவும் மாநில அரசு கடப்பாடு கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக பிரகடனப் படுத்தும்
சாத்தியம் உள்ள பகுதிகளை அடையாளம் காண்பதும் அம்முயற்சிகளில் அடங்கும். இந்த திட்டத்தை செயல்படுத்த முடியும் என நம்புகிறோம். எனினும் இது எளிதான பணியல்ல. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக ஆர்ஜிதம் செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படும் என்றார் அவர்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பது நீரை சேகரிப்பது மற்றும் வெப்பத்தை தணிப்பது ஆகிய நோக்கங்களுக்காக மாநில அரசு 3 இடங்களில் 581.48 ஹெக்டர் பகுதியை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக பிரகடனப்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். சபாக் பெர்ணமில் உள்ள சுங்கை பாஞ்சாங் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, அம்பாங் பெச்சா, உலு லங்காட்டின் புரோகா ஆகியவையே அப்பகுதிகளாகும் எனக் கூறிய அவர், இந்த வனப்பகுதிகளில் அரிய வகை தாவரங்களும் உயிரினங்களும் உள்ளதாகச் சொன்னார்.

### இ-வாலட் மேம்பாடு

# மூன்று மாதங்களில் தொடங்கப்படும்-எம்.பி.ஐ.




ஷா ஆலம் :–

சிலாங்கூர் மந்திரி புசார் நிறுவனம் அல்லது எம்பிஐ இன்று இ-வாலட்களை உருவாக்குவதற்கான முதலீட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. வாவ்பே நிறுவனம் மற்றும் அதன் குழும நிறுவனர் டான் சுன் ஐக் உடன் வர்த்தகம் மற்றும் தொழில்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ 'தெங் சாங் கிம் ஆகியோருடன் கையெழுத்திடும் நிகழ்வு நடைபெற்றது.

சிலாங்கூர் இ-வாலட் எஸ்டிஎன் பிஎச்டி இன் தலைவரான சாங் கிம், இந்த கூட்டு முயற்சியானது சேவைகள் மற்றும் சமூகத்தின் அடிப்படையில் அனைத்து நிதி முயற்சிகளையும் இணைக்கும் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

திட்டமிட்டபடி சரியாக நடைப்பெற்றால் அடுத்த மூன்று மாதங்களில் இ-வாலட்டின் பெயர் அறிவிப்புடன் தொடங்கப்படும் என்றார். 'சிலாங்கூரில் பணமில்லா சமூகத்தை உருவாக்குவதில் டத்தோ 'மந்திரி புசார் டத்தோ' ஸ்ரீ அமிருடின் ஷாரியின் விருப்பத்திற்கு இணங்க இது உள்ளது. தேசிய வங்கி உடன் வீட்டுவசதி மற்றும் உள்ளாட்சி அமைச்சகம் (KPKT) வழங்கிய பணக்கடன் உரிமத்துடன், மாநில அரசுக்கும் தற்போதுள்ள இ-வாலட் நிறுவனத்திற்கும் இடையே இந்த திட்டம் உருவாக்கப்படும், என்று அவர் கூறினார். ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வுக்கு பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்நிகழ்வில், எம்பிஜ தலைமை செயல் அதிகாரி நோரிடா முகமது சிடேக் உடனிருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பரில் தாக்கல் செய்யப்பட்ட 2022 பட்ஜெட்டில், பணமில்லா சமூகத்தை உருவாக்க சிலாங்கூர் இ-வாலட் சேவையை தொடங்கும் என்று அமிருடின் கூறினார். சிலாங்கூர் இ-வாலட் எஸ்டிஎன் பிஎச்டி தற்போதுள்ள இ-வாலட் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள நிறுவப்பட்டதாக அவர் கூறினார்




### நீடித்த சுற்றுச்சூழல் திட்டங்களை அமல்படுத்த

# 128 அமைப்புகள் நியமனம்

ஷா ஆலம்:-

சிலாங்கூர் அரசின் 2021/2022 பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மானியத் திட்டத்தில் பங்கேற்பதற்கு 128 அமைப்புகளும் சங்கங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த பங்கேற்பாளர்கள் ஆக்கத்தன்மையுடன் கூடிய நீடித்த சுற்றுச் சூழல் திட்டங்களை அமல்படுத்துவர் என்று சுற்றுச் சூழல் மற்றும் பசுமைத் தொழில் நுட்பத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

கடந்தாண்டு டிசம்பர் 1 தேதி முதல் இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் தொடங்கிய நிலையில் மொத்தம் 320 விண்ணப்பங்களை நாங்கள் பெற்றோம். அவற்றில் 128 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டன. பசுமைத் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களில் கவனம் செலுத்தாத காரணத்தால் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

தேந்தெடுக்கப்பட்ட பங்கேற் பாளர்கள் ஆறுகள் மற்றும் கடற் கரைகளைச் சுத்தம் செய்வது, சுற்றுச்சூழல் தொடர்பான கருத் தரங்கு களை நடத்துவது, மரம் நடுவது போன்ற நீடித்த சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களில் பங்கேற்பர் என்றார் அவர். மாநில அரசு தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற 2021/2022 ஆம் ஆண்டிற்கான பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் மானியங்களை வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக வெப்பமயம், நீர் மற்றும் காற்று மாசுபாடு ஆகிய பிரச்சனைகளை களைந்து சற்றுச்சூழலை பாதுகாக்கும் மாநில அரசின் முயற்சிக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.

### இணைய சேவையை மேம்படுத்த

# யுனிசெல் பல்கலைக்கழகத்திற்கு வெ.30 லட்சம் மானியம்




பெஸ்தாரி ஜெயா:-

சிலாங்கூர் பல்கலைக்கழகத்தின் (யுனிசெல்) இணைய தரவு சேவையை மேம்படுத்த சிலாங்கூர் மாநில அரசு இவ்வாண்டில் 30 லட்சம் வெள்ளி மானியம் வழங்குகிறது.கடந்தாண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கல்வி மீது அக்கறையும் ஈடுபாடும் கொண்ட அரசாங்கம் என்ற முறையில் இணைய தரவு சேவையை மேம்படுத்துவதற்காக யுனிசெல் பல்கலைக்கழகத்திற்கு மாநில அரசு 30 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது என்று அவர் சொன்னார்.

இந்த நிதி ஒதுக்கீடு மாணவர்களுக்கு கூடுதல் வசதியையும் மாநில அரசுக்கு சொந்தமான இந்த உயர்கல்விக் கூடத்தின் போட்டியிடும் ஆற்றலை மேம்படுத்தவும் துணை புரியும் எனத் தாங்கள் நம்புவதாக அவர் தெரிவித்தார். பெஸ்தாரி ஜெயாவிலுள்ள யுனிசெல் பல்கலைக் கழகத்தின் வேந்தர் மண்டபத்தில் இன்று நடைபெற்ற 15வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய போது அப்பல்கலைக்கழகத்தின் இயக்குநர் வாரியத் தலைவருமான அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வரும்2025 ஆம் ஆண்டில் சிலாங்கூரை விவேக மாநிலமாக்கும் திட்டத்திற்கேற்ப இணைய தரவு சேவை மேம்படுத்தப்படுவது அவசியம் என்று மாநில அரசு கருதுவதாக அவர் கூறினார்.

# சிலாங்கூர் ஹிஜ்ரா வணிகத் திட்டத்தின் வழி

# 1,637 மகளிர் பயனடைந்தனர்



ஷா ஆலம் :–

கடந்தாண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி முதல் நேற்று வரை 'நாடி' எனப்படும் நியாகா டாருள் ஏசான் திட்டத்தின் வழி வர்த்தக கடனுதவி வழங்குவதற்கு யாயாசான் ஹிஜ்ரா அறவாரியம் 67 லட்சத்து 80 ஆயிரம் வெள்ளியைச் செலவிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிலாங்கூரிலுள்ள 1,637 மகளிர் பயன் பெற்றதாக ஹிஜ்ரா அறவாரியத்தின் வர்த்தக ஊக்குவிப்பு பிரிவு நிர்வாகி முகமது ரிட்வான் அஸ்மாரா கூறினார். வர்த்தகத்தை தொடங் குவதற்கான மூலதன நிதியாக வெ.1,000 முதல் வெ.5,000 வரை அவர்களுக்கு வழங்கப் பட்டது. இத்திட்டத்திற்கு வணிகர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. இவ்வாண்டு ஜனவரி முதல் இதுவரை 117 பேர் 522,000 வெள்ளியை கடனுதவியாகப் பெற்றுள்ளனர் என்றார் அவர்.

இத்திட்டத்தில் பங்கேற்ற பெரும் பாலானோர் வர்த்தகம், உணவுத் தயாரிப்பு, விவசாயம், பதனிடு, கால் நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருவதாக சிலாங்கூர் கினிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார். இந்த ''நாடி' வணிகத் திட்டத்தில் பங்கேற்பது எளிதானது எனக் கூறிய அவர், இதர மைக்ரோ கிரடிட் கடனுதவித் திட்டங்களைப் போல் வாராந்திர கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றார்.

சிறு வணிகர்களுக்கு உதவும் நோக்கில் மாநில அரசு கித்தா சிலாங்கூர் உதவித் தொகுப்பின் கீழ் தொடக்க நிதியாக 1 கோடி வெள்ளியை ஒதுக்கியுள்ளது. வணிகத்தில் ஈடுபடுவோர் குறைந்த பட்சம் 1,000 வெள்ளி முதல் அதிகப் பட்சம் 5,000 வெள்ளி வரை கடன் பெற முடியும். கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு 6 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது.

# முட்டை, இறைச்சி, மீனுக்கு உச்சவரம்பு விலை

## சிலாங்கூர் அரசு திட்டம்

ஷா ஆலம் :– பிப் 8× மக்களின் சுமையைக் குறைக்கும் விதமாக கோழி முட்டை, மாட்டிறைச்சி மற்றும் மீன் போன்ற உணவுப் பொருள்களுக்கு உச்ச வரம்பு விலையை நிர்ணயிக்க சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

கோழியை கிலோ 8.00 வெள்ளிக்கு விற்பனை செய்யும் திட்டத்திற்கு பொது மக்களிடமிருந்து கிடைத்து வரும் ஆதரவின் அடிப்படையில் இத்திட்டம் பரிந்துரைக்கப்படுவதாக விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

நோன்புப் பெருநாள் வரை அமல்படுத்தபடுத்தக்கூடிய புதிய திட்டம் இதுவாகும். தொடக்கமாக இத்திட்டத்தின் கீழ் கோழிக்கான உச்சவரம்பு விலையை நிர்ணயித்துள்ளோம். அதனைத் தொடர்ந்து கோழி முட்டை, மாட்டிறைச்சி மற்றும் சில வகை மீன்களுக்கும் விலை வரம்பை



நிர்ணயிக்கவுள்ளோம் என்றார் அவர்.

விற்கப்படும் உணவுப் பொருள்கள் தரமுடையதாகவும் அதன் விலை வரம்பிற்குட்பட்டதாகவும் இருப்பது உறுதி செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

இங்குள்ள பி.கே.பி.எஸ் கட்டிடத்தில் நேற்று நடைபெற்ற 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த வேளாண் சாதனையாளர் விருதளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

தற்போது இரு இடங்களில் மலிவு விலையில் கோழி விற்பனை மேற்கொள்ளப்படுவதாக கூறிய அவர், மேலும் அதிகமானோர் பயன் பெறும் வகையில் இத்திட்டம் மற்ற பகுதிகளுக்கும் விரிவு படுத்தப்படும் என்றார்.

# இணையம் வாயிலாக பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி விற்பனையா? சிலாங்கூர் வன இலாகா மறுப்பு

ஷா ஆலம் :–

இணையம் வாயிலாக பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலுள்ள நிலங்கள் விற்கப்படுவதாக சில அரசு சாரா அமைப்புகள் சுமத் தியுள்ள குற்றச்சாட்டை சிலாங்கூர் மாநில வன இலாகா மறுத்துள்ளது. சிலாங்கூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 43,539 ஹெக்டர் பாதுகாக்கப் பட்ட வனப்பகுதி நிலங்கள் கடந்தாண் டில் இணையம் மற்றும் பேஸ்புக் வாயிலாக விற்கப்பட்டதாக ரிம்பா டிஸ்குளோஷர் புரோஜெட் எனும் சுயேச்சை அமைப்பு மேற்கொண்டு ஆய்வில் குறிப் பிடப்பட்டுள்ளது.

விற்பனைக்கு வைக்கப்பட் டுள்ள அந்த நிலங்கள் 1985 ஆம் ஆண்டு சிலாங்கூர் வன இலாகா சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் அல்ல என்று சிலாங்கூர் மாநில வன இலாகா இயக்குநர் டத்தோ அகமது பட்சில் அப்துல் மஜிட் கூறினார். புலாவ் இண்டா (புலாவ் லுமுட்) பகுதியில் 192 ஹெக்டர் நிலமும் புஞ்சா ஆலமில் 72 ஹெக்டர் நிலமும் விற்பனைக்கு உள்ளதாக அகப்பக்கம் வாயிலாக விளம்பரம் செய் யப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். நாங்கள் மேற் கொண்ட ஆய்வில் அவ்விரு இடங்களும் பாதுகாக்கப்பட்ட வனப்பகு திக்கான அந்தஸ்தைக் கொண் டிருக்கவில்லை என்பது தெரியவந் துள்ளது என்று அவர் அறிக்கை ஒன்றில் கூறினார்.

சிலாங்கூர் அரசு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் ஈடுபாட்டின் வாயிலாக மாநிலத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் பரப்பளவு கடந்தாண்டு 250,250.29 ஹெக்டராக ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். தீபகற்ப மலேசியாவில் வனப்பகுதிகள் வர்த்தக நோக்கத்திற்காக விற்கப்ப டுவது தொடர்பில் அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் என்று குடியிருப்பாளர் சங்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கவாதிகளை உள்ளடக்கிய அரசு சாரா அமைப்புகள் வலியுறுத்தியிருந்தன.

# சிலாங்கூர் அரசாங்கம் சட்டவிரோத குப்பைக்குழிகளை கண்காணிக்க செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்துகிறது




கிள்ளான் :–

சிலாங்கூர் அரசாங்கம், மாநிலத்தில் சட்டவிரோதமாக குப்பைக்குழிகளை கண்டறிய, மலேசிய விண்வெளி செயற்கைக் கோள் நிறுவனங்களின் (MYSA) செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தும். கடந்த வாரம் மாநில அரசு, மலேசிய விண்வெளி செயற்கைக்கோள் நிறுவனம் MYSA மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு இடையே நடந்த பல விவாதங்களின் விளைவாக இந்த ஒத்துழைப்பு எட்டப்பட்டதாக ஊராட்சிமன்ற ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். மலேசிய விண்வெளி செயற்கைக்கோள் நிறுவனங்களின் அடிப்படையில், சிலாங்கூர் முழுவதும் சுமார் 1,400 சட்டவிரோத குப்பை கொட்டும் இடங்கள் கண்டறியப்பட்டன, ஆனால் இன்னும் உறுதிப் படுத்த முடியவில்லை. தொடர்ந்து நடவடிக்கை எடுக்க, கண்காணிப்பை அதிகரிக்க, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. "MYSA க்கு இடையிலான ஒத்து ழைப்பு செலவுகளை உள்ளடக்காது மற்றும் சட்ட விரோத குப்பைக்கு ழிகளை கண்டறிவதற்கான முயற்சிகளுடன் மட்டுமின்றி மேலும் பல்வேறு செயல்பாடுகளை உட்படுத் தியுள்ளது, என்று இன்று கிள்ளான் ஹம்சா முனிசிபல் கவுன்சில் மண்டபத்தில் (MPK) 2020/ 2021 நிலையான வளர்ச்சியை நோக்கி கிள்ளான் செஜாத்ரா பாராட்டு விழாவை நடத்திய பின்னர் கூறினார். இதற்கிடையில், சமூகம் குறிப்பாக குடியிருப்பாளர்கள், தொழிற்சாலை நடத்துபவர்கள் மற்றும் கட்டுமான தளங்கள் தங்கள் அணுகுமுறையை மாற்ற வில்லை என்றால்,

சட்டவிரோத குப்பைக்குழிகளை மற்றும் குப்பைகள் பிரச்சினை தொடரும் என்று ஸீ ஹான் கூறினார். 'தற்போது, சிலாங்கூரில், ஆறு செயலற்ற கழிவு அமலாக்கத் தளங்கள் உள்ளன, அதே நேரத்தில் ஜெராம், தஞ்ஜோங் 12 மற்றும் உலு சிலாங்கூரில் உள்ள மூன்று உள்நாட்டு கழிவுகளை அகற்றும் தளங்கள் வேல்ட்வைட் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன,சு என்று அவர் கூறினார். நிலையான வளர்ச்சியை நோக்கிய கிள்ளான் செஜாத்ரா பாராட்டு விழா என்பது செழுமையான மற்றும் தரமான சூழலை உருவாக்குவதற்கான, நிலையான வளர்ச்சியின் இலக்கை ஆதரிப்பதில் கிள்ளான் சமூகத்தின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டும் விழாவாகும். மறுசுழற்சி, தூய்மை மற்றும் மகிழ்ச்சியான குடியிருப்புப் பகுதி போட்டிகள், கழிவறை சுகாதாரம் மற்றும் குறைந்த கார்பன் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களில் அடங்கும்.

# 1,000 அடுக்குமாடி வீட்டுப் பகுதிகளில்
## எல்.இ.டி., சோலார் விளக்குகள் பயன்படுத்தப்படும்

ஷா ஆலம் :–

கூட்டு நிர்வாக மன்றத்தின் கீழுள்ள 1,000 அடுக்குமாடி குடியிருப்புகளில் விரிவான மின் சக்தி சேமிப்புத் திட்டத்தின் கீழ் சிலாங்கூர் விவேக அடுக்கக மற்றும் சொத்துடைமை முறை (எஸ்.ஐ.எஸ்.பி.) இவ்வாண்டு அமல்படுத்தப்படும்.

பசுமை தொழில்நுட்பத்தை நோக்கிய பயணத்தின் தொடக்கமாக இக்குடியிருப்பு பகுதிகளில் கட்டணமின்றி எல்.இ.டி. மற்றும் சோலார் எனப்படும் சூரிய சக்தி விளக்குளைப் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும் என்று வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.




இத்தகைய அடுக்குமாடி குடியிருப்புகளில் லிப்ட் மற்றும் நீர் அழுத்த பம்ப் ஆகியவற்றுக்கு உண்டாகும் செலவை கணக்கிடும் போது இத்திட்டத்தின் கீழ் 80 விழுக்காட்டு மின்சக்தியை சேமிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். தொடக்கமாக இத்திட்டம் அடுக்ககங்களில் அமல்படுத்தப் படும். பின்னர், வர்த்தக கட்டிடங்கள், கடை வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இவ்வாண்டில் மட்டும் 1,000 அடுக்குமாடி குடியிருப்புகளில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

கிளேன்மேரி கோல்ப் அண்ட் கண்ட்றி கிளப்பில் எஸ்.ஐ.எஸ்.பி. திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

எல்.இ.டி. மற்றும் சோலார் விளக்குகளைப் பொருத்துவதன் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்றும் அவர் சொன்னார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

# 10,000 க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தற்காலிக உரிமங்களைப் பெற்றனர்,
## மேலும் விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தினர் ஆட்சிக்குழு உறுப்பினர்

கிள்ளான் :–

மாநில அரசு உரிமம் பெறாத வணிகர்களுக்கும், கோவிட்–19 ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வணிகம் நடத்த 10,000க்கும் மேற்பட்ட தற்காலிக உரிமங்களை வழங்கியுள்ளது.

ஊராட்சி மன்றங்களுக்கான பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான், இந்த முயற்சியானது, மாநில அரசு எப்போதுமே தனிநபர்களுக்குத் தகுந்த மற்றும் பாதுகாப்பான இடத்தில் வணிகத்தை நடத்துவதற்கு உதவியும், வசதியும் செய்து வருகிறது என்பதற்கான சான்று என்றார்.

“சிறு வியாபாரிகள், சாலையோர வியாபாரிகள் மற்றும் தொழில் தொடங்க விரும்புபவர்கள் தற்காலிக உரிமம் பெற விண்ணப் பிப்பதை வரவேற்கிறோம். “அவர்கள் உள்ளாட்சி அலுவ லகத்திற்கு வர வேண்டும் அல்லது கவுன்சில் உறுப்பினர்களைச் சந்திக்க வேண்டும். பாதுகாப்பான மற்றும் பொருத்தமான இடத்தை வழங்குவதற்குப் பொறுப்பான தரப்பு தயாராக உள்ளது,” என்றார்.

இன்று கிள்ளான் மாநகரச் சபையின் (MPK) ஹம்சா மண்டபத்தில் நிலையான அபிவிருத்தியை நோக்கிய 2020/2021க்கான கிள்ளான் செஜாத்ரா பாராட்டு விழாவை நடத்திய பின்னர் அவர் சந்தித்தார். டிசம்பர் 17 அன்று, மாநில அரசு சிறு வணிகர்களுக்கான தற்காலிக உரிமக் காலத்தை அடுத்த ஆண்டு ஜூன் வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது. இந்த முயற்சி இந்த மாதத்துடன் முடிவடை யும் என்றும் ஆனால் கோவிட்–19 தொற்றுநோயின் தாக்கம் காரணமாக வணிகம் செய்ய விரும்பும் நபர்களுக்கு தொடர்ந்து உதவுவதாக ஸீ ஹான் கூறினார்.




உரிமம் இல்லாத வணிகர்கள் மற்றும் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமம் வழங்கும் பணி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கியது. வணிகத்தளங்களுக்கு பொருத்தமாக, பாதுகாப்பாக மற்றும் இடையூறு விளைவிக்காமல் இருப்பதையும் உள்ளூர் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

# ‘ஜோப்கேர்’ திட்டத்தின் வழி 3,000 வேலை வாய்ப்புகள்– பிப்ரவரி 26 முதல் நடைபெறும்

ஷா ஆலம்:– சிலாங்கூர் மாநில அரசு “ஜெலாஜா ஜோப்கேர்“ எனும் மாநில அளவிலான பயணத் திட்டத்தின் வாயிலாக சுமார் 3,000 வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவுள்ளது.

இந்த திட்டத்தை சொக்சோ எனப்படும் சமூக பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து யு.பி.பி.எஸ். எனப்படும் சிலாங்கூர் தொழிலாளர் ஆக்கத்திறன் அளிக்கும் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. மாநிலத்திலுள்ள 9 மாவட்டங்களில் இம்மாதம் 26 ஆம் தேதி முதல் ஜூன் 25 ஆம் தேதி வரை நடைபெறும் வேலை வாய்ப்பு பயணத் திட்டத்தில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 15 நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளதாக யு.பி.பி.எஸ் ஒருங்கிணைப்பாளர் விஜயன் சுப்பிரமணியம் கூறினார்.



கோவிட்–19 தொற்று காரணமாக வேலை இழந்த குறைந்த, நடுத்தர மற்றும் உயர் திறன் கொண்ட தொழிலாளர்களுக்கு உதவும் நோக்கில் இந்த வேலை வாய்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளும்படி சிலாங்கூர் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். இந்த நிகழ்வில் சொச்சோ மூலம் கிடைக்கப்பெறும் அனுகூலங்கள் குறித்தும் விளக்கப்படும் என அவர் தெரிவித்தார். சிலாங்கூர் மாநிலத்தில் தற்போது நிலவி வரும் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதிலும் இத்திட்டம் துணை புரியும் என்று இங்கு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த யு.பி.பி.எஸ். அமைப்பின் அடிப்படை நோக்கத்திற்கேற்ப மாநிலத்தில் வேலையில்லாப் பிரச்னைக்கு தீர்வு காண நாங்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறோம் என்றார் அவர்.

இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் பங்கு பெற விரும்புவோர் https://uppselangor.wixsite.com/my-site. எனும் அகப்பக் கத்தை வலம் வரலாம்.ஜோப்கேர் வேலை வாய்ப்பு சந்தை நடைபெறும் நாள் மற்றும் இடங்கள் வருமாறு–

1. Klang – Dewan Hamzah (26 Februari)
2. Hulu Selangor – Dewan Seri Garing, Rawang (12 Mac)
3. Petaling – Dewan Serbaguna Camelia, Seksyen 10, Putra Height (26 Mac)
4. Kuala Selangor – Dewan Dato’ Penggawa (26-27 Mac)
5. Petaling – Dewan Serbaguna Camelia Seksyen 10, Putra Height (3-4 April)
6. Sepang – Dewan Taman Gemilang, Dengkil (14 Mei)
7. Hulu Langat – Dewan Demesne (21 Mei)
8. Gombak – Dewan Taman Gombak (4 Jun)
9. Kuala Langat – Dewan Sri Jugra (18 Jun)
10. Sabak Bernam – Dewan Sri Bernam (25 Jun)

# வர்த்தகத்தைப் விரிவாக்க கடனுதவிக்கு விண்ணப்பம் செய்வீர்

## இந்திய தொழில்முனைவோருக்கு வேண்டுகோள்

ஷா ஆலம் :–

வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்கு ‘‘வியாபாரம்@சித்தம்‘‘ எனும் திட்டத்தின் கீழ் சிறப்பு மூலதன சுழல் நிதிக்கு விண்ணப்பம் செய்யும்படி இந்த தொழில்முனைவோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 50 தொழில் முனைவோர் கடனுதவிக்கு விண் ணப்பித்துள்ளதாக தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர் களில் முதன்மையானவராக பிரியாணி வியாபாரியான எஸ். ரமேஷ் விளங்கு வதாகவும் அவர் குறிப்பிட்டார்.



அவருக்கு ‘‘சித்தம்‘‘ எனப்படும் சிலாங்கூர் இந்தியர் தொழில் ஆர்வலர் மையத்தின் மூலம் வர்த்தக உபகரணங்கள் வாங்குவதற்கு 9,000 வெள்ளி வழங்கப்பட்ட வேளையில் வாகனம் மூலம் உணவு விற்பனை செய்வதற்கு கோஹிஜ்ரா வாயிலாக 50,000 வெள்ளி கடனுதவி வழங்கப்பட்டது என்றும் ரோட்சியா தெரிவித்தார்.




தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ,ரோட்சியா இஸ்மாயில் புக்கிட் திங்கியில் நேற்று நடைபெற்ற சித்தம் வர்த்தக உபகரணங்களை ரமேஷிடம் ஒப்படைக்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். ‘‘வியாபாரம்@ சித்தம்‘‘ எனும் திட்டத்தின் வாயிலாக இந்திய தொழில் முனைவோருக்கு உதவுவதற்காக யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியம் ஒரு கோடி வெள்ளி சிறப்பு மூலதன சுழல் நிதியை ஒதுக்கியுள்ளது.

வர்த்தகர்கள் தங்கள் வர்த்தகத்தை பாதியிலே நிறுத்தாமல் தொடர்ந்து மேற்கொள்வதை உறுதி செய்யும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

---

## சுபாங் ஜெயா டத்தோ பண்டாராக ஜோஹாரி அனுவார் பதவியேற்றார்




ஷா ஆலம் :–

சுபாங் ஜெயா மாநகர் மன்ற டத்தோ பண்டாராக டத்தோ ஜோஹாரி அனுவார் நியமிக்கப்பட் டுள்ளார். சுபாங் ஜெயா மாநகர் மன்ற தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சடங்கொன்றில் அவர் இப்பதவியை ஏற்றுக் கொண்டார்.

தற்போது கிள்ளான் நகராண் மைக் கழகத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள நோராய்னி ரோஸ்லானுக்கு பதிலாக ஜோஹாரி இப்பதவிக்கு நியமனம் பெற்றுள் ளார். இம்மாதம் 3 ஆம் தேதி முதல் அவரது நியமனம் அமலுக்குவருகிறது.

48 வயதான ஜோஹாரி, ஜெர்மனி, பெர்லின் தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தில் நகர் நிர்வாகத் துறையில் இளங்கலை பட்டமும் மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகத் தில் இளங்கலை பட்டமும் மாரா தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் வர்த்தக கல்வித் துறையில் டிப்ளோமாவும் இந்தான் எனப்படும் தேசிய பொது நிர்வாக கழகத்தில் பொது நிர்வாகத் துறையில் டிப்ளோமாவும் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2020 முதல் பெட்டாலிங் மாவட்ட மற்றும் நில அதிகாரியாக பணியாற்றி வந்தார். பொதுச்சேவைத் துறையில் 22 ஆண்டு கால அனுபவம் கொண்ட ஜோஹாரி சுபாங் ஜெயா மாநகர் மன்றத்திற்கு நியமனம் பெற்றுள்ள இரண்டாவது டத்தோ பண்டார் ஆவார்.

---

## வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்களுக்கு உதவ 20 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு




கிள்ளான் :–

சிலாங்கூரில் கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்களுக்கு உதவ மாநில அரசு 20 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த சிறு தொழில்முனை வோர் மானிய நிதித் திட்டத் திற்கு மாவட்ட அலுவலங்கள் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம் என்று தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட் சியா இஸ்மாயில் கூறினார். வெள்ளப் பேரிடரில் பாதிக் கப்பட்டவர்களை இலக்காக கொண்ட இந்த உதவித் திட்டத்தை ஒருங்கிணைக்கும் பணியை மாநில அரசு யுபென் எனப்படும் பொருளாதார திட்டமிடல் பிரிவின் வாயிலாக மேற்கொண்டு வருகிறது. இந்நோக்கத்திற்காக நாம் 20 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளோம் என்றார் அவர்.

இந்த திட்டத்திற்கு 100 முதல் 200 வணிகர்கள் விண்ணப்பம் செய்வர் என எதிர்பார்க்கிறோம். விண்ணப்பம் செய்வோர் சிறு வணிகர்களாகவும் வருடாந்திர வர்த்தகம் 300,000 லட்சம் வெள்ளிக்கும் மேற்போகாமலும் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும் என்று அவர் சொன்னார். சித்தம் எனப்படும் இந்திய தொழில் ஆர்வலர் மையத்தின் ஏற்பாட்டில் இங்குள்ள புக்கிட் திங்கியில் நடைபெற்ற வர்த்தக உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறு வணிகர்கள் தங்கள் வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு உதவும் நோக்கில் இந்த சிறு தொழில்முனைவோர் மானிய நிதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது அது வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்று ரோட்சியா சொன்னார்.

---

## ஹிட்மாட் 100 தன்னார்வலர் குழு செந்தோசா தொகுதியில் உருவாக்கம்

கிள்ளான்:–

இளையோரை இலக்காகக் கொண்ட ‘‘ஹிட்மாட் 100’’ தன்னார்வலர் குழு செந்தோசா தொகுதியில் அமைக்கப்பட்டது.



இந்தத் தன்னார்வலர் குழுவின் தொடக்க விழா செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தலைமையில் இங்குள்ள தாமான் கிள்ளான் ஜெயாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடை பெற்றது.

இளையோர் மத்தியில் உதவி மனப்பான் மையை வளர்ப்பது, தலைமைத்துவப் பண்பும் பொறுப்புணர்வும் கொண்ட இளை யோரை அடையாளம் காண்பது ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இத்திட்டம் அமல்படுத் தப்படுகிறது. பி.கே.ஆர். கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இரு வாரங்களுக்கு முன்னர்த் தேசிய நிலையில் ஹிட்மாட் திட்டத்தைத் தொடக்கி வைத்த பின்னர் இத்திட்டத்தைச் சட்டமன்ற நிலையில் அமல்படுத்தும் முதலாவது தொகுதியாகச் செந்தோசா விளங்குகிறது. இந்த தன்னார்வலர் குழுவினர் செந்தோசா தொகுதியில் மட்டுமின்றி நாட்டின் இதர பகுதிகளிலும் பேரிடர் நிவாரணப் பணியில் ஈடுபடுவர்.

# தொற்று நோய்க்குப் பிந்தைய பொருளாதார உந்துதல்

## திட்டம் 1 : உயர் தாக்கப் பொருளாதார வளர்ச்சி மற்றும் விநியோகச் செயல்திறனை மேம்படுத்தத் தூண்டுதல்

சிலாங்கூர் 2022 பட்ஜெட்டில் **RM234** கோடி ரிங்கிட் மற்றும் **RM112** கோடி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. கடந்த நவம்பர் 26 அன்று ஐந்து முக்கியத் திட்டங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள கோவிட்-19 தொற்றுக்குப் பிந்தைய பொருளாதாரத்தை இயக்குவது உட்படச் சமூகத்தின் நல்வாழ்வைப் பலப்படுத்துவதும் இதில் அடங்கும்.

பல சுவாரஸ்யமான முதலாம் பாக முக்கியத் திட்டங்கள் சிலாங்கூர்கினி வெளியிடுகிறது. இன்னும் நான்கு திட்டங்கள் அடுத்தடுத்த மாதங்களில் வெளியிடப்படும்.

மாணவர்கள், பெண்கள், **B40,** மாற்றுத் திறனாளிகள், தொழில்முனைவோர் மற்றும் விவசாயிகள் உட்பட அனைத்துக் குழுக்களுக்கும் பட்ஜெட் நன்மை பயக்கும், சுகாதாரம், கல்வி, தொழில், வணிகம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது.

கித்தா சிலாங்கூர் கருப்பொருள்: மாநிலம் சோதனையைத் தாங்கி, மனிதக் கண்ணியத்தை உயர்த்துதல் ஆகும். கடந்த ஆண்டு இறுதியில் எட்டு மாவட்டங்களைத் தாக்கிய வெள்ள பேரழிவுக்குப் பிறகு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப இந்தப் பட்ஜெட் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வணிக வசதிக் கொள்கை (எளிய முறை வணிகம்)

திட்டமிடல் அனுமதியை உள்ளிட்ட வணிகப் பரிவர்த்தனைகளை எளிதாக்குதல், உள்கட்டமைப்புத் திட்டங்கள் மேம்பாடுகள்.

நில மேம்பாட்டு செயல்முறை காலம் 50 சதவீதம் சேமிக்கப்படுகிறது

சிலாங்கூர் நிலம் மற்றும் சுரங்க அலுவலகம் (PTGS) மாநிலம் முழுவதும் Smartbox PTGS செயல்படுத்துவதை விரிவுபடுத்துகிறது

ஜனவரி 1, 2022 முதல் 31 டிசம்பர் 2023 வரை மலிவு விலையில் வீடு கட்டுவதற்கான மேம்பாட்டு கட்டணமாக RM500 செலுத்துவதில் 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படும்.

தொழில்துறை வசதிகளுக்காக நிலப் பிரீமியம் வைப்புத்தொகை 100 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது

### சிலாங்கூர் பிராட்பேண்ட் நிறுவனம் (ஜாலின்)

SMARTSEL RM60 லட்சம் ஒதுக்கீட்டில் தொழில்துறை பகுதிகளில் பிராட்பேண்ட் வழங்கத் தொலைத்தொடர்பு துறை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது.



### சர்வதேச வணிக உச்சி மாநாடு (SIBS) 2022

SIBS 2022ஐ வெற்றிகரமாக்கச் சிலாங்கூர் முதலீட்டிற்கு RM1.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிலாங்கூர் ஸ்மார்ட் சிட்டி மற்றும் டிஜிட்டல் பொருளாதார மாநாட்டின் (SDEC) கூறுகளை ஆசியான் ஸ்மார்ட் சிட்டி மாநாட்டிற்கு விரிவுபடுத்துவது.

### சிலாங்கூர் தொழிலாளர் குடியிருப்பு வளாகத்தின் வளர்ச்சி

**RM50** லட்சம் ஆரம்ப நிதியுடன் பொது–தனியார் கூட்டுத் திட்டம்

60,000 தொழிலாளர்களுக்கு உகந்தது.

சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகத்தால் (PKNS) கட்டப்பட்டது

டோபி, உணவகம், மளிகைக் கடை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

மொத்தம் 145 ஏக்கர் பரப்பளவு, இதில் 59 ஏக்கர் மாநில அரசு நிலம் மற்றும் 86 ஏக்கர் பிகேஎன்எஸ் நிலம்

### விண்வெளித் துறை

சிலாங்கூர் விமானப் போக்குவரத்து மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் எஸ்டிஎன் பிஎச்டி (SELATI), SELATI-UNISEL சிறப்பு மையம், SELATI-UNISEL விமானப் பள்ளி, சிலாங்கூர் திறன் கட்டமைப்பு மற்றும் தொழில் பாதையை நிறுவுதல்.

சிலாங்கூர் பல்கலைக்கழகம் (UNISEL) பெஸ்தாரி ஜெயாவில் விண்வெளி, செயற்கை நுண்ணறிவு மற்றும் ட்ரோன் மேம்பாட்டு சப்ளையர்ஸ்களுக்கான முதலீட்டு வாய்ப்புகள்.

குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள், விமானப் பொறியியலில் இளங்கலை பட்டங்கள், திறமையான மனித மூலதனம் மற்றும் தொழிலாளர் சந்தையின் வளர்ச்சி ஆகியவற்றை வழங்குகிறது.

### சிலாங்கூர் வான் கண்காட்சி 2022

அமைப்புக்கு RM50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5,000 பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களிலிருந்து 30 பங்கேற்பாளர்களின் வருகையை இலக்காகக் கொண்டுள்ளது, இதில் நிலையான விமானக் கண்காட்சி மற்றும் ஒரு மன்றம் உள்ளது.

### சிலாங்கூர் மாநில ரயில் தொழில்துறை

சிலாங்கூர் மாநில ரயில் தொழில் கவுன்சில் நிறுவப்படுவது.

ஏறக்குறைய 8,000 பணியாளர்களைக் கொண்ட 50 நிறுவனங்கள் இணைந்துள்ளன.

இரயில் தொழிலைப் பொருளாதாரத்தின் தூணாக ஆக்கி வேலைகளை உருவாக்குங்கள்

### சிலாங்கூர் தெற்கு வளர்ச்சிப் பாதை

சிப்பாங்கில் உள்ள சிலாங்கூர் சர்வதேச ஏரோ பார்க் வளர்ச்சியில் ஒரு சுதந்திர வர்த்தக மண்டலம், பசுமை தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவை அடங்கும்.



சிலாங்கூரின் மந்திரி புசார் நிறுவனம் அல்லது எம்பிஐத் தலைமையில் 2,000 ஏக்கரில் விண்வெளி வசதிகள்

### சபா பெர்ணம் பொருளாதார வளர்ச்சி

சிலாங்கூரில் ஒரு முதன்மை உணவு உற்பத்தி மையத்தை உருவாக்குவது.

திட்டத்தில்:

– 450 ஏக்கர் நிலப்பரப்பு கடல்சார் பொருட்கள் மற்றும் வேளாண் உணவுத் தொழில் மையத்தை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சுமார் RM50 கோடி முதலீட்டில் உருவாக்குதல்.

– செகிந்தியில் கோழி இறைச்சிக் கூடம் கட்ட 1.5 கோடி ரிங்கிட்

– ஜெலுதோங் ஜாத்தியில் பாமாயில் தொழிற்சாலையை உருவாக்க RM5 கோடி

– சுங்கை லாங் மற்றும் ஆயர் மனிஸில் சுமார் **RM50** கோடி முதலீட்டு மதிப்பில் 36 ஏக்கர் பரப்பளவில் தளவாடங்கள் மற்றும் வர்த்தக மையம்.

சுற்றுலா

– பாகன் நகோடா ஓமரில் உள்ள கெலோங் பாரடைஸை மேம்படுத்துதல்

- RM2 கோடி முதலீட்டில் தனியார் துறையுடன் ஹே ரிசோர்ட்டை மேம்படுத்துவது.


### செரண்டா

12வது மலேசியத் திட்டத்திற்கு ஏற்ப ஒரு விண்வெளி தளவாடம் மற்றும் உயர் தொழில்நுட்ப மையமாக உருவாக்குவது.

### நிலையான கிள்ளான் நதி வளர்ச்சி

10 ஆண்டுகள் வரையிலான வளர்ச்சிக் காலம் கிள்ளான் ஆற்றின் 56 கிலோமீட்டர்களில் 600 ஏக்கர் அரசு நிலத்தை உள்ளடக்கியது.

லண்டசன் லுமாயன் பெர்ஜயா மூலம் லண்டசன் லுமாயன் எஸ்டிஎன் பிஎச்டி 2,000 மலிவு வீடுகள் மற்றும் 1,400 கட்டுப்பாடற்ற விலை வீடுகளைக் கட்டுவது.



900 சதுர அடி மலிவு விலையில் ஐந்து அறைகள் மற்றும் நான்கு குளியலறைகள் கொண்ட வாடகைக்கு விட தக்க வீடுகள்.

கிள்ளான் ஆற்றின் கரையில் 26,000 குடியிருப்புகளின் மேம்பாடு 2030 இல் நிறைவடையும், அவற்றில் 13,000 மலிவு வீடுகள்

### ஹலால் துறை

ஹலால் தொழில் பகுதிக்கு RM20 லட்சம் மலேசியாவில் முதன்முதலில் 700 ஏக்கர் பரப்பளவில் புலாவ் இன்டா ஹலால் ஹப் உருவாக்குவது.

சிலாங்கூர் ஹலால் செயல் திட்டம் (SELHAP) 2018 – 2028 மூலம், மாநில அரசு:




– ஒரு மையப்படுத்தப்பட்ட ஹலால் ஆன்லைன் போர்ட்டலை, IMFAN ஆன்லைன் வணிகத் தளம் (சர்வதேச முஸ்லிம் நட்பு இணைப்பு நெட்வொர்க்) உருவாக்குதல்.

– பல்வேறு தொழில் துறைகளின் ஹலால் சான்றிதழுக்கான முக்கிய ஆதாரமாக மத்தியத் தகவல் தளம் (CIF) ஹலால் பொருள் தரவுதளத்தை நிறுவுதல்.

– கிள்ளான் நகரில் RM500,000 மதிப்புள்ள நவீனச் சேமிப்புக் கிடங்கைக் கட்டுதல்.

### சுற்றுலாத் துறை

சுற்றுலாத் துறையை உள்ளடக்கிய 2021–2025 காலகட்டத்தில் RM11.46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது:

– 2022 இல் சுற்றுலாத் தொழில் முனைவோருக்கான மறுவாழ்வு உதவி (எங்கள் சிலாங்கூர் தொகுப்பு)

– சக்திவாய்ந்த சிலாங்கூர் மாநிலச் சுற்றுலா ஊக்குவிப்பு பிரச்சாரம் (முந்தைய சிலாங்கூர் மீட்டெடுத்தல் பிரச்சாரம் அற்புதமான சிலாங்கூர் பிரச்சாரம்)



– "பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்"

சுற்றுலாவுக்கான நிலையான இயக்க நடைமுறைகளை (SOP) செயல்படுத்துதல்.

– சிலாங்கூர் சர்வதேச மாநாடு 2022 சுற்றுலா மாநாட்டை நடத்துவது

சுற்றுலா மற்றும் கைவினைப் பொருள் வசதிகளை மேம்படுத்துதல்

### உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொது வசதிகள்

மாநிலச் சாலை திட்டங்களுக்கு RM13.813 கோடி

- SELGEM Sdn Bhd சாலை சேதத் தரவை விரைவாகக் கண்டறிய உருவாக்கப்பட்ட ஆன்லைன் அமைப்பு ஏற்கனவே உள்ள அமைப்புகளுடன் இணைந்து மாநிலம் முழுவதும் பயன்படும்.

– புதிய சாலைகள் அமைக்க RM4.4 கோடி. அவற்றில், சுங்கை கௌம்பு – கென்திங் சான்யென், கோலாலங்காட் விரிவாக்கச் சாலையை அமைக்க RM1 கோடி மற்றும் கம்போங் ஸ்ரீ இன்டா ஏ இல் இருந்து சுங்கை பூலோ மருத்துவமனைக்குச் சாலை அமைக்க RM1 கோடி.

– கம்போங் சுங்கை குண்டாங், கோம்பாக், கம்போங் சுங்கை புவா மற்றும் சிப்பாங்கில் பாலங்கள் கட்ட RM82.3 லட்சம்.

– தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்த RM6.54 கோடி

– மாநிலம் முழுவதும் சாலை வர்த்தமானிக்கு RM20 லட்சம்.

சிலாங்கூரில் உள்ள அனைத்து அரண்மனைகளின் மறுசீரமைப்பு உட்படக் கட்டிடங்களைக் கட்ட மற்றும் மேம்படுத்த RM49.8 லட்சம்.

ஷா ஆலம் ராஜா துன் உடா நூலகத்தின் வளர்ச்சி (கட்டம் 2B)

– கட்டம் 1 மற்றும் கட்டம் 2ஹ திட்டங்களின் தொடர்ச்சி

– ராயல் கேலரி, மந்திரி புசார் கேலரி மற்றும் படைப்பாற்றல்மிக்க கற்றல் நூலகம் ஆகியவற்றின் ஆரம்பக் கட்டுமானத்திற்காக RM500,000

– ஒரு அமைதியான கண்காட்சி மற்றும் வாசிப்பு இடமாக இரட்டைச் செயல்பாட்டு இடத்தை உருவாக்கவும்

– நடைபாதை பகுதிகள், பொழுதுபோக்கு பகுதிகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் உருவாக்கப்பட்டன

### சிலாங்கூர் டிஜிட்டல் பள்ளி (SDS)

* சிலாங்கூர் பல்கலைக்கழகம் (யுனிசெல்) மற்றும் தி ஹைவ் ஆகியவற்றுடன் இணைந்து நிறுவப்படுவது.

* டிஜிட்டல் மற்றும் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில்நுட்பம் தொடர்பான படிப்புகளுக்குச் சலுகை வழங்குதல்.

* நிதி அமைச்சகத்தின் (MOF) தேசிய மூலதன ஜெனரேட்டராக ஹைவ் ஒரு மூலதன நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* தேசிய ஜெனரேட்டர் சிலாங்கூர் அரசு மற்றும் தி ஹைவ் ஆகியவற்றின் இணையான முதலீடுகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதில் கற்பித்தல் ஊழியர்களை வழங்குதல், சமீபத்திய கலப்பினக் கற்றல் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் ஆகியவை அடங்கும்.

### ஹிஜ்ரா சிலாங்கூர்

தொழில் முனைவோருக்கு RM12 கோடி

RM100,000 வரை புதிய கட்டணத் திட்டம்.

ஆரம்ப நிதி இலக்கு RM1 கோடி

2,000 விவசாயிகளுக்கான i-Agro திட்டத்திற்கு RM5.2 கோடி அதிகபட்சமாக RM26,000 செலவாகும்.

ஹிஜ்ரா தளம் எனப்படும் பல சேவை வணிக மையத்தை உருவாக்கவும்

ஜீரோ–டு–ஹீரோ திட்டத்திற்கான குறைந்தபட்சக் கடன் தொகையை RM5,000 லிருந்து RM10,000 ஆக உயர்த்தவும்

RM30,000 மற்றும் அதற்கும் குறைவான கடனுக்கான நிர்வாகக் கட்டணங்களை நான்கு சதவீதமாகக் குறைக்கவும்

கடன் வாங்கியவரின் கணக்கில் கடன் தொகையில் 25 சதவீதம் இருக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையை ரத்து செய்ய வேண்டும்.

### சிலாங்கூர் இந்தியத் தொழில்முனைவோர் உபகரண உதவித் திட்டம் (ஐ-சீட்)

திட்டத்தைத் தொடர RM11.46 லட்சம் ஒதுக்கீடு

### SIDEC டிஜிட்டல் பொருந்தும் மானியங்கள்

* டிஜிட்டல் சேவை வழங்குநர்களுக்குக் குழு சேர, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் (SMEs) 50 சதவீதம் பொருந்தக்கூடிய மானியம் அல்லது RM5,000 வரை நிதி ஒதுக்கீடு.

* RM50 லட்சம் ஐந்து டிஜிட்டல் பகுதிகளை உள்ளடக்கியது.

### சிலாங்கூர் சிறு தொழில்முனைவோர் நிதி மானியம் (DUMS)

* ஒதுக்கீடு 20 லட்சம் சிலாங்கூர் குறு தொழில்முனைவோர் விற்பனையை உக்குவிக்க.
* தகுதியுடையவர்களுக்கு RM 30,000 வரை வழங்குதல்

### பணியாளர் அதிகாரமளிக்கும் பிரிவு

* சிலாங்கூர் ஊழியர் அதிகாரமளிக்கும் பிரிவை (UPPS) நிறுவ RM10 லட்சம்.
* வேலை மற்றும் வருமானத்தை இழந்த குறைந்த வருமானம் கொண்ட குழுவுக்கு (B40) உதவுதல்.
* திறன் திட்டங்களை வழங்க UPPS அரசு மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயல்படுவது

### சிலாங்கூர் அமலாக்கம் மற்றும் செயல்திறன் கண்காணிப்பு பிரிவு (SIAP)

*மாநில அரசின் சேவைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் திட்டச் செயல்திறனைக் கண்காணிப் பதற்கும் நிறுவப்பட்டது.

* கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் செயல்முறைக்கான மாநிலச் செயலாளர் அலுவலகத்தின் கீழ் ஒரு பிரிவு

### துணை நிர்வாகம் மற்றும் ஒருமைப்பாட்டு கொள்கை

* எம்பிஐ மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ஜனவரி 2021 முதல் மலேசிய ஊழல் எதிர்ப்பு ஆணையத்துடன் (MACC) இணைந்து ஏழு ஒருமைப்பாடு மற்றும் ஆளுகைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டன.
* எம்பி உடன் ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் விற்பனையா ளர்களை உள்ளடக்கியது.
* ஒருமைப்பாடு மற்றும் ஆளுகை சிக்கல்களை நிர்வகிப்பதில் பயிற்சித் திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதலை உறுதிப்படுத்த MACC உடனான மூலோபாய ஒத்துழைப்பு

### உள்ளாட்சி திட்டங்களைச் செயல்படுத்துதல்

* ஒரு வளமான நகரம் மற்றும் வளர்ந்த மாநிலத்தை நோக்கிய வளர்ச்சிக்காக RM40 லட்சம்.
* உள்ளாட்சி அமைப்பு (PBT) வசதிகள் மற்றும் சமூகத்திட்டங்களை மேம்படுத்துதல்

### மின் மறுஆய்வு போர்டல் மற்றும் நிலம்/பார்சல் வரிக்கான மின்-கட்டணம்

* நிதி செயல்முறை பரிமாற்றம் (FPX), அனுகல், பில்களை அச்சிடுதல், நில வரி ரசீதுகள் மற்றும் பார்சல் வரிகளைப் பயன்படுத்தி வணிகத்திற்கு வணிக (B2B) வசதியை அறிமுகப்படுத்துதல்

### நிரல் அமலாக்கம்

* அனுமதியின்றித் தொழிற்சாலை ப்ளீச்சிங்.
* ஜூலை 2021 வரை அங்கீகரிக்கப்படாத தொழிற்சாலை. ப்ளீச்சிங் திட்டத்தின் மூலம் RM7.6 கோடி வசூலிக்கப் பட்டது.
* மொத்தம் 4,728 இடங்களில் மற்றும் 5,755 தொழிற்சாலைகள் அடையாளம் காணப்பட்டன. டிசம்பர் 2020 வரை நிலத்தின் வகை மற்றும் உண்மையான நிலையை மாற்ற மொத்தம் 367 விண்ணப்பங்கள் பெறப்பட்டது..
* விவசாயம் அல்லாத பிற நிலங்களைத் தற்காலிகமாகப் பயன்படுத்தச் சிறப்பு அனுமதி திட்டத்தைச் செயல்படுத்துவது.
* குடியிருப்பு அல்லது வணிக நோக்கங்களுக்கன்றி, வேறு பயன்பாட்டுக்கு ஒரு சிறப்பு குடியிருப்பு அனுமதியைச் செயல்படுத்தவும்

## 2020 ஆம் ஆண்டுக்கான
# மக்கள் தொகை கணக்கெடுப்பு

கோலாலம்பூர்:–

கடந்த 2020 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்டில் 3 கோடியே 24 லட்சத்து 47 ஆயிரத்து 385 பேர் உள்ளனர் என்று டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

நாட்டில் மக்கள் தொகை எண்ணிக்கையில் சராசரி வளர்ச்சி விதம் 1.7 விழுக்காடு ஆகும். மொத்த மக்கள் தொகையில் குடியுரிமை பெற்றவர்கள் 2 கோடியே 98 லட்சம் அல்லது 91.7 விழுக்காட்டினர் ஆவர். குடியுரிமை அல்லாதவர்கள் 27 லட்சம் பேர் அல்லது 8.3 விழுக்காட்டினர் என்றார்.

தொடர்ந்து, பாலினக் கணக்கெடுப்பின்படி ஆண்கள் 1 கோடியே 70 லட்சம் பேர் மற்றும் பெண்கள் 1 கோடியே 55 லட்சம் பேராக பதிவாகியுள்ளது என்ற கூறினார்.

மேலும், வயது வரையிலான தரவுகளின்படி, நாட்டில் 14 வயதுக்குட் பட்டவர்களின் எண்ணிக்கை 78 லட்சம் அல்லது 24 விழுக்காடு ஆகும். 15 முதல் 64 வயதுடையோர் 2 கோடியே 25 லட்சம் பேர் அல்லது 69.3 விழுக்காட்டினர். 65 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 22 லட்சம் அல்லது 6.8 விழுக்காடாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்

இன ரீதியிலான கணக்கெடுப்பின் மொத்த



மக்கள் தொகையில் 69.4 விழுக்காடாக மலாய்க்காரர்கள் உள்ளனர். அதனை அடுத்து 23.2 விழுக்காடு சீனர்கள். இந்தியர்கள் 6.7 விழுக்காடாகவும் பிற இனத்தவர்கள் 0.7 விழுக்காடாகவும் உள்ளனர். இந்தியர்களின் எண்ணிக்கை கடந்த 2010 ஆம் ஆண்டில் 7.3 விழுக்காட்டில் இருந்து தற்போது 0.6 விழுக்காட்டில் சரிவு கண்டுள்ளது.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை 7 முதல் 2021 அக்டோபர் 31 வரையில் மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே, நாட்டில் உள்ள தனித்து வாழும் தாய்மார்களின் எண்ணிக்கை 8.3 விழுக்காடு அல்லது 10 லட்சத்தை நெருங்கிவிட்டதாக சிறப்பு விவகாரங்களுக்கான பிரதமர் துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ முஸ்தபா முகமது கூறினார்.



கொடையாக வழங்கப்பட்ட பொருட்களை இடம் வாரியாகப் பிரிக்க உதவும் பக்தர்கள்

அகதிகள் ஆனவர்களை அரவணைத்த

# கோத்தா கெமுனிங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.

**ஆலயங்களும், தமிழ்ப்பள்ளியும் இச்சமுதாயத்தின் அடையாளமென எண்ணியவர்களை வியக்க வைத்த ஒப்பற்ற உள்கட்டமைப்பு. உயர்வுக்கும் ஒற்றுமைக்கும் உயிர்நாடி என்பதை மீண்டும் நிருபித்துவிட்டது.**

## வெ.18 லட்சம் பெறுமானம் கொண்ட பொருள்கள் 40,000 பேருக்கு விநியோகம்.

ஜீவாத்மாவாகிய மனிதர்களை பரமாத்மாவாகிய இறைவனுடன் ஐக்கியப் படுத்தும் இடம்தான் ஆலயம். ஆறுகால பூஜைகளும் அபிஷேக ஆராதனைகளும்தான் இந்த வழிபாட்டுத் தலங்களின் முதன்மை இறைப்பணி.

இறைப்பணியோடு ஆலயங்களின் திருப்பணி நின்றுவிடக் கூடாது. மாறாக, இன்னலில் இருக்கும் இறைத் தொண்டர்களுக்கு அபயக்கரம் நீட்டும் அரும்பணியையும் ஆற்ற வேண்டும் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியது அண்மையில் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர்.

### இன, சமய பேதமின்றி உதவிய ஆலயம் மற்றும் சமூகம்

கடந்தாண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன, சமய பேதம் கடந்து உதவிக்கரம் நீட்டும் பெரும் பணியில் நாட்டிலுள்ள எண்ணற்ற ஆலயங்கள் ஈடுபட்டன. அத்தகைய தன்னலமற்றப் பணியை அயராது ஆற்றிய ஆலயங்களில் ஒன்றுதான் ஷா ஆலம், கோத்தா கெமுனிங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.

வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தாமான் ஸ்ரீ மூடாவிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் கோத்தா கெமுனிங் வட்டாரத்தில் அமைந்துள்ள இந்த ஆலயம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய உதவிகளைச் செய்தது என்பதை விவரிக்கிறார் ஆலயத் தலைவர் டத்தோ நாதன் சுப்பையா.

## சிற்றுண்டியாக 300 பேருக்கு ஆரம்பித்து 3000 பேருக்கு உணவாக மலர்ந்தது

கடந்த டிசம்பர் 18 ஆம் தேதி ஷா ஆலம் சுற்றுவட்டாரத்தின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்த நிலையில், மறுநாள் 19 ஆம் தேதி காலை இந்து சமய நல அமைப்பினர் எங்களைத் தொடர்பு கொண்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு சிற்றுண்டி தயாரிக்க உதவி கோரினர்.

உடனடியாக 300 பேருக்கு சிற்றுண்டி ஏற்பாடு செய்து தந்தோம். வெள்ளத்தின் தாக்கம் சிறிதென தொடக்கத்தில் எண்ணினோம். ஆனால் நேரம் செல்லச் செல்ல அந்த பேரிடரின் விபரீதம் எங்களுக்கு புரியத் தொடங்கியது. ஆயிரக்கணக்கானோர் வெள்ள அகதிகள் ஆனதை அறிந்தோம். உடனடியாக துரித கதியில் உதவிப் பணியில் இறங்கினோம். அன்றிரவு 800 பேருக்கு உணவை தயாரித்து அளித்தோம். மறுநாள் தொடங்கி 2,000 முதல் 3,000 பேருக்கு மதிய மற்றும் இரவு உணவை வழங்கத் தொடங்கினோம்.

இந்த உணவுப் பொருள்கள் எமரால்டு தமிழ்ப்பள்ளியில் செயல்பட்ட வெள்ள நிவாரண மையம், ஸ்ரீ மூடா, ஹைக்கோம், புக்கிட் லஞ்சோங், ஆலம் மேகா, கம்போங் ஜாவா ஆகிய பகுதிகளுக்கு அனுப்பினோம். இந்தப் பணி தொடர்ச்சியாக ஏழு நாட்களுக்கு நடைபெற்றது. இந்த உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் பணியில் 30 பேரும் அவற்றை விநியோகிக்கும் பணியில் 60 பேரும் ஈடுபட்டனர்.



உணவு பட்டுவாடாவில் பக்தர்கள்

## மக்கள் ஆதரவில் பிரமித்தோம்

இந்த உணவுகள் இந்தியர்களுக்கு மட்டுமின்றி மலாய் சமூகத்தினருக்கும் வழங்கப்பட்டன. ஆலம் மேகா மற்றும் புக்கிட் லஞ்சோங் பகுதிகளில் உணவைப் பெற்றவர்களில் சுமார் 80 விழுக்காட்டினர் மலாய்க்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்று டத்தோ நாதன் குறிப்பிட்டார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முயற்சியை முன்னெடுத்த போது, பொது மக்களிடமிருந்து அதற்கு கிடைத்த ஆதரவைக் கண்டு நாங்கள் பிரமித்துப் போனோம். எல்லோர் மனதிலும் ஈரம் இருக்கிறது. இன்னல்படுவாருக்கு உதவ வேண்டும் என்ற வேட்கை இருக்கிறது. ஆனால் அதற்கான வழிதான் அவர்களுக்கு தெரிய வில்லை. அவர்கள் கண்ணில் பட்டது ஆலயம்தான். ஆலயத்திடம் ஒப்படைத்தால் உதவிகள் சரியான தரப்பிடம் போய்ச் சேரும் என அவர்கள் நம்பினார்கள். அதனால் பொருள்களை வாரி வழங்கினார்கள்.



இது கடுமையான பணி ஆனால் அவ்வளவும் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்கிறாரா ஆலயத் தலைவர் டத்தோ நாதன் சுப்பையா ?

பலர் சொந்தமாக சமைத்த உணவை எங்களிடம் கொடுத்து விநியோகிக்கச் சொன்னார்கள். சிலர் ஆர்வமிகுதியால் அசைவ உணவையும் கொண்டு வந்தார்கள். அவற்றை ஆலய வளாகத்திற்கு வெளியே வைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்தோம்.

ஒரு வார காலம் மேற்கொள் ளப்பட்ட இந்த உணவு விநியோகப் பணியின் போது 18,000 முதல் 20,000 உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

## 10 நாட்கள் அரிசி, சீனி முதல் வாளி சோப்பு வரை

உணவு விநியோகம் தவிர்த்து சமையலுக்கு தேவையான அரிசி சீனி, சமையல் எண்ணெய், உணவுப் பொருள்களையும் மெத்தை, தலையணை போர்வை, மின்சார உபகரணங்கள், வீட்டைச் சுத்தம் செய்வதற்கு தேவையான வாளி, சோப்பு, துடைப்பம் போன்ற பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாங்கள் விநியோகம் செய்துள்ளதையும் டத்தோ நாதன் சுட்டிக்காட்டினார்.

இப்பொருட்களை தினசரி சுமார் 2,500 பேர் என்ற அடிப்படையில் 25,000 பேருக்கு தொடர்ச்சியாக பத்துநாட்களுக்கு வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கான மலேசிய உற்பத்தியாளர் சம்மேளனம் 400,000 வெள்ளி மதிப்பிலான பொருள்களை எங்களுக்கு வழங்கியது என்று அந்த சம்மேளனத்தின் உதவித் தலைவருமான அவர் குறிப்பிட்டார். இந்த வெள்ள நிவாரண உதவித் திட்டத்திற்கு டாமன்சாரா மற்றும் வடகிள்ளான் லையன்ஸ் கிளப், பெர்ஜெயா குழுமம், தன்னார்வலர்கள், பொது மக்கள் உதவிகளை வாரி வழங்கினர்.



வெள்ள நிவாரண மையத்திற்கு உணவு தயார் செய்யும் கோத்தா கெமுனிங் ஆலயப் பக்தர்களில் சிலர்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பத்து நாட்களில் ஆலயம் சார்பில் வழங்கப்பட்ட உணவு மற்றும் உதவிப் பொருள்களின் மதிப்பு 18 லட்சம் வெள்ளியை எட்டும். இதன் மூலம் 40,000 த்திற்கும் மேற்பட்டோர் பலனடைந்தனர் என்றும் அவர் சொன்னார்.

இறைப்பணி என்றவுடன் இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் வள்ளல் குணம் நம் மக்களிடம் உள்ளது. அவ்வாறு கிடைக்கும் நன்கொடைகளை வசதி குறைந்தவர்களுக்கு பகிர்ந்தளிப்பதை ஆலயத்தின் கடமையாக நாங்கள் கருதுகிறோம். ஈகை குணமும் இரக்க குணமும் கொண்டவர்களின் உதவியுடன் இது போன்ற உதவிகளை தொடர்ந்து செய்து வருவோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

**- எழுத்து (ஆர்.ராஜா)**

# இலக்கவியல் வாகன நிறுத்துமிடக் கட்டண முறைக்கு மக்கள் ஆதரவு

## ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கருத்து

ஷா ஆலம் :– எஸ்.எஸ்.பி. எனப்படும் இலக்கவியல் முறையிலான வாகன நிறுத்துமிடக் கட்டண முறைக்கு பொது மக்களிடம் நல்ல ஆதரவு கிடைத்து வருவதாக ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

ஸ்மார்ட் சிலாங்கூர் டெலிவரி யூனிட் அமைப்பினால் மேம்படுத்தப்பட்ட இந்த ஸ்மார்ட் சிலாங்கூர் பார்க்கிங் (எஸ்.எஸ்.பி.) செயலியை இதுவரை சுமார் 20 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளது இந்த திட்டத்திற்கு கிடைத்து வரும் ஆதரவை புலப்படுத்துவதாக உள்ளது என்று அவர் சொன்னார்.

தற்போது நடப்பிலுள்ள காகித கூப்பன்களுக்கு பதிலாக இந்த



இ–கூப்பன் முறை வரும் ஏப்ரல் மாதம் முதல் மாநிலத்திலுள்ள 10 ஊராட்சி மன்றப் பகுதிகளில் அமல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் 10 ஆம் தேதி வரை 18 லட்சத்து 90 ஆயிரம் பேர் எஸ்.எஸ்.பி. செயலியை பதிவிறக்கம் செய்துள்ளதாக அண்மையில் சிலாங்கூர் கினி நிருபர்களுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் இங் குறிப்பிட்டார்.

வெகு விரைவில் இந்த எண்ணிக்கை 20 லட்சத்தை எட்டி விடும். மலேசியாவில் முதல் நிலை செயலியாக இந்த எஸ்.எஸ்.பி. செயலி விளங்கும் என்று நான் நம்புகிறேன். இந்த திட்டத்திற்கு பொதுமக்களிடம் அமோக ஆதரவு கிடைத்து வருவதை இந்த எண்ணிக்கை உயர்வு காட்டுகிறது என்று அவர் தெரிவித்தார்.

நடப்பிலுள்ள காகித வடிவிலான வாகன நிறுத்துமிடக் கட்டண கூப்பன் முறை கடந்தாண்டு டிம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவுக்கு வரவிருந்ததாக கூறிய அவர், பொது முடக்கம் காரணமாக பலர் தங்கள் வசமிருந்து கூப்பன்களை பயன்படுத்தி முடிக்காத காரணத்தால் இத்திட்டம் வரு மார்ச் மாதம் ஒத்தி வைக்கப்பட்டது என்றார்.

புறநகர்ப் பகுதிகளான சபாக் பெர்ணம் மற்றும் உலு சிலாங்கூரில் இந்த எஸ்.எஸ்.பி செயலி முறை அமல்படுத்தப்படவில்லை. இவ்விரு பகுதிகளிலும் கார் நிறுத்துமிட வசதி இன்னும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. இந்த இலக்கவியல் கார் நிறுத்துமிடத் திட்டத்தை இவ்விரு இடங்களில் எதிர்காலத்தில் அமல்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

# நெகிழிப்பை பயன்பாட்டிற்கு எதிராக சிலாங்கூர் அரசு தீவிரப் பிரசாரம்

ஷா ஆலம் :–

நெகிழிப் பை பயன்பாட்டிற்கு எதிராக சிலாங்கூர் மாநில அரசு இவ்வாண்டில் தீவிர பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வுள்ளது.நெகிழிப் பைகளின் பயன்பாட்டை குறைப்பது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் ஊடகங்களின் ஒத்துழைப்பு நாடப்படும் என்று சுற்றுச் சூழல் மற்றும் பசுமை தொழில்நுட்பத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

நெகிழிப் பைகளுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவது உள்ளிட்ட சுற்றுச் சூழல் தொடர்பான அம்சங்களில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் ஊராட்சி மன்றங்கள் பங்கேற்பதையும் நாங்கள் ஊக்குவிக்கவுள்ளோம் என்று அவர் சொன்னார்.

இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற 2021/2022 ஆம் ஆண்டிற்கான சுற்றுச் சூழல் மற்றும் பசுமைத் தொழில்நுட்ப மானியம் வழஙகும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

வர்த்தக மையங்களில் நெகிழிப் பைகளுக்கு கட்டணம் விதிப்பதன் மூலம் மாநில அரசு கடந்தாண்டில் 64 லட்சம் வெள்ளியை வசூலித்ததாக கூறிய அவர், அதற்கு முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 66 லட்சம் வெள்ளியாக இருந்தது என்றார்.

நெகிழிப் பைகளுக்கான கட்டண வசூல் குறைந்தது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கான நல்ல அறிகுறியாக விளங்குகிறது என்று அவர் மேலும் சொன்னார்.

தற்போது நெகிழிப் பைகளுக்கு வர்த்தக மையங்களில் விதிக்கப்படும் 20 காசு கட்டணம் போதுமானதாகும். இவ்விஷயத்தில் மக்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. வசூலிக்கப்பட்ட இந்த தொகை நெகிழிப் பைகளின்



பயனீட்டைக் குறைப்பதற்கான பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றார் அவர்.

# ஜூன் மாதம் முதல் 4,186 ஒப்பந்த மருத்துவர்கள் நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்படுவர்

ஷா ஆலம் :–

மலேசியாவின் சுகாதார அமைச்சகத்தின் (MOH) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் மொத்தம் 4,186 மருத்துவ, பல் மற்றும் மருந்தியல் அதிகாரிகள் வரும் ஜூன் மாதம் முதல் நிரந்தரப் பதவிகளில் நியமிக்கப்படுவார்கள்.



நிரந்தர நியமனங்களில் 3,586 மருத்துவ அதிகாரிகள், 300 பல் மருத்துவர்கள் மற்றும் 300 மருந்தாளுநர்கள் ஈடுபட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

இது தவிர, 2023 முதல் 2025 வரை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 1,500 மருத்துவ அதிகாரிகளை நியமிக்கவும் அரசாங்கம் ஒப்புக்கொண்டதாக அவர் கூறினார்.

சுகாதார சேவைகளை மேம்படுத்த, 2023 முதல் ஒவ்வொரு ஆண்டும் MOH இல் 800 நிரந்தர மருத்துவர்கள் மற்றும் 70 பல் மருத்துவர்களை நியமிக்க அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது என்று அவர் இன்று ஆன்லைன் செய்தியாளர் சந்திப்பின் மூலம் கூறினார்.

இந்த நடவடிக்கையின் மூலம், 2022 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் மருந்தியல் அதிகாரிகளுக்கான 8,686 நிரந்தர பணியிடங்கள் நிரபப்படும் என்று கைரி கூறினார்.

முன்னதாக, ஒப்பந்த மருத்துவர்களுக்கு அரசு நிரந்தர பணியிடங்களை வழங்காததை கண்டித்து, கடந்த ஆண்டு ஜூலை 26–ம் தேதி முதல் ''ஹர்த்தால் டாக்டர்'' என்னும் நாடு தழுவிய போராட்டத்தின் வழி, மருத்துவ பணியாளர்கள் கடும் தொழில் நிறுத்த நடவடிக்கை எடுத்ததை நாடு அறியும்..

# சிலாங்கூர் அரசின் இரு வர்த்தக திட்டங்கள் மூலம் பயனடைந்தேன்

## பிரியாணி வணிகர் ரமேஷ் பெருமிதம்



கிள்ளான் :– சிலாங்கூர் அரசின் இரு வரத்தக உதவித் திட்டங்கள் மூலம் தாம் பயனடைந்ததாக பிரியாணி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் எஸ். ரமேஷ் (வயது 56) பெருமிதத்துடன் கூறினார்.

அவ்விரு வர்த்தக விண்ணப் பங்களும் அவ்வளவு எளிதில் அங்கீகரிக்கப்படும் என தாம் சிறிதும் எதிர்பார்க் கவில்லை என்றும் அவர் சொன்னார்.

மாநில அரசின் ஒரு திட்டத்தின் மூலம் மட்டும் அல்லாமல் இரு திட்டங்கள் வாயிலாக உதவி கிடைத்தது எனக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியது என்றார் அவர். "சித்தம்" எனப்படும் சிலாங்கூர் மாநில இந்திய தொழில் ஆர்வலர் மையம் வாயிலாகவும் சிலாங்கூர் ஹிஜ்ரா அறவாரியத்தின் மூலமாகவும் தங்களுக்கு வர்த்தக உதவி நல்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பிரியாணி வியாபாரத்தை என் மனைவி திருமதி ஜி. இந்திராவுடன் (வயது 50) இணைந்து கடந்த 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடக்கினேன். சில மாதங்களுக்குப் பின்னர் ஹிஜ்ரா அறவாரியம் மூலம் நான் செய்த விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு "சித்தம்" திட்டத்தின் வாயிலாக வர்த்தக உபகரணங்கள் பெறுவதற்கு விண்ணப்பித்தேன். வாகன உணவு அங்காடி வியாபாரம் செய்வதற்கு விண்ணப்பிக்கும்படி அவர்கள் பரிந்துரைத்தனர். அதிர்ஷ்டவசமாக அவ்விரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றார் அவர்.

எங்கள் வியாபாரத்தை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தந்த மாநில அரசுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்று சிலாங்கூர் கினியிடம் ரமேஷ் தெரிவித்தார்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் தலைமையில் நேற்று கிள்ளான், புக்கிட் திங்கியில் நடைபெற்ற நிகழ்வில் சுமார் 9,000 வெள்ளி மதிப்பிலான வர்த்தக உபகரணங்கள் மற்றும் உணவு விற்பனை வாகனம் ஆகியவற்றை ரமேஷ் பெற்றுக் கொண்டார்.

வர்த்தகத்தில் ஈடுபட ஆர்வமுள்ள இந்தியர்களுக்கு வர்த்தக வழிகாட்டி, மானியம் மற்றும் உபகரணங்களை வழங்குவதை இலக்காக கொண்டு "சித்தம்" அமைப்பு கடந்த 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

# சிலாங்கூர் இந்தியர்களுக்கான ஐ-சீட் திட்டம் மூலம் அன்பழகன் பயனடைந்தார்

சிப்பாங்கைச் சார்ந்த அன்பழகன் சிறு வணிகத் தொழிலை மேற்கொண்டு வருகிறார். அவர் எலெக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் இன்ஜினியரிங் டிப்ளமோ பட்டம் பெற்றவர். ஏர் ஏசியாவில் தொழில்நுட்ப வல்லுநர் பணியாற்றி வந்தார். இடையில் கோவிட்–19 காரணமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் இவரும் ஒருவர். திருமணமாகி இரு குழந்தைகளின் தந்தையான அன்பழகன் குடும்ப வருமானத்திற்காகச்



சிறு வணிகத் தொழிலைத் தொடங்கியுள்ளார்.

சுயத் தொழிலைத் தொடங்கச் சில அடிப்படை பொருட்கள் பற்றாக்குறையினால் சிப்பாங் கவுன்சில் உறுப்பினர் திரு. சிவகுமார் மற்றும் இந்தியச் சமூகத்தின் தலைவரையும் சந்தித்தார். அவர்கள் அன்பழகனுக்கு ஐ–சீட் அலுவலகத்தை நாட வழி ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ஐ–சீட் அதிகாரி திரு. குகன் அவரின் விண்ணப்பத்தை ஏற்றக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தார். அதன் பயனால் சிறிது நாட்களிலேயே விண்ணப்பத்தில் கேட்டது போல் BOSCH பிராண்ட் கம்பியில்லா துரப்பணம், BOSCH பிராண்ட் ஸ்கேனர்/டிடெக்டர் மற்றும் டெல் பிராண்ட் மடிக்கணினி போன்ற உதவிப் பொருட்கள் அன்பழகனுக்குக் கிடைக்கப் பெற்றது.

அவரும் ஒரு வெற்றிக்கரமான தொழில் முனைவராக உருவெடுக்க வழியமைத்துக் கொடுத்துள்ளது சிலாங்கூர் மாதில ஐ–சீட் தொழில்முனைவோர் உதவித்திட்டம்

அன்பழகனின் சுயத் தொழிலுக்கு ஐ–சீட் திட்டம் பெறும் பங்காற்றி உள்ளது. சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு வீ. கணபதிராவ் நிர்வாகத்தின் கீழ் உள்ள இத்திட்டத்தால் ஏராளமானோர் பயனடைந்துள்ளனர்.

# சிறந்த தனித்து வாழும் தாய்,

## நற்சேவை விருது பெற்ற திருமதி கே. மகேஸ்வரி




மனுக்குல மாண்புகளில் மகத்தானது மக்கள் சேவை. அடுத்தவர்களுக்காக தன்னுயிர் உருக்கும் அருங்குணம் அனைவருக்கும் வசப்படாது. அத்தகைய குணம் வாய்ந்த பலர் நம்மிடையே இருப்பதால்தான் பூமிப்பந்தில் ஈரப்பதம் இன்னும் இருக்கிறது.

அத்தகைய மக்கள் சேவையை வெறும் கடமைக்காக அல்லாமல் வேள்வியாக செய்து வருவோரில் ஒருவராக விளங்குகிறார். பாயா ஜெராஸ் தொகுதிக்கான இந்திய சமூகத் தலைவர் திருமதி கே. மகேஸ்வரி.

ஐம்பதெட்டு வயதான இந்த தனித்து வாழும் தாய் சொல்லில் அடங்காத சோகங்களுக்கு மத்தியிலும் 20 ஆண்டுகளாக தனியொருவராக நின்று பத்து பேர் கொண்ட குடும்பத்தை கரை சேர்த்திருக்கிறார். அயராத சேவையின் வாயிலாக வட்டார மக்களின் மனதிலும் இடம் பிடித்திருக்கிறார்.

கடந்த 2011 ஆம் ஆண்டில் பெக்காவானிஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில மகளிர் சமூக நல மன்றத்தின் சார்பாக சிறந்த தனித்து வாழும் தாய்க்கான நற்சேவையாளர் விருதை பெற்றது இவரின் சேவைக்கான அங்கீகாரமாக விளங்குகிறது.

பல ஆண்டுகளாக சமூகப் பணியில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்ட இவர், கடந்த நான்கு ஆண்டுகளாக சமூகத் தலைவர் பொறுப்பை ஏற்று தொகுதி மக்கள் எதிர்நோக்கும் மருத்துவம், பொருளாதாரம், கல்வி, சமூகவியல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்குத் தன்னால் இன்ற உதவிகளை நல்கியுள்ளார்.

அதோடு மட்டுன்றி, கோவிட்–19, வெள்ளம் போன்ற பேரிடர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை செய்துள்ளதோடு தீபாவளி, பொங்கல் போன்ற பெருநாள் காலங்களிலும் வசதி குறைந்தவர்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கியுள்ளதாக மகேஸ்வரி குறிப்பிட்டார்.

கடந்த தீபாவளியின் போது சமூகத் தலைவருக்கான நிதி மூலம் 200 பேருக்கும் சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா வாயிலாக மேலும் 100 பேருக்கும் உணவுப் பொட்டலங்களை தாங்கள் வழங்கியதாக அவர் சொன்னார்.

இது தவிர, சித்தம், ஐ–சீட் போன்ற வர்த்தக உபகரண உதவித் திட்டங்களில் தகுதி உள்ளவர்கள் பயன்பெறுவதை உறுதி செய்து வருவதோடு பள்ளி செல்லும் மாணவர்களுக்கு வேண்டிய பள்ளி உபகரணங்களையும் வழங்கி வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் நான் என்றும் முன்நிற்பேன். என்னால் தீர்க்க முடியாத விஷயங்களை சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான முகமது கைருடின் ஒத்மான் மற்றும் நாடாளுன்ற உறுப்பினர் ஆர். சிவராசாவின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வு காண்டு வருகிறேன். குறிப்பாக ஆர். சிவராசா வழங்கி வரும் ஒத்துழைப்பு காரணமாக எண்ணற்றப் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளேன் என்றார் அவர்.

# ஷா ஆலமில் பொங்கல் கலை,கலாசார விழா

## - திரளானோர் பங்கேற்பு



பொங்கல் திருநாளை முன்னிட்டு இங்குள்ள செக்சன் 16, கென் ரிம்பா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் கலை, கலாசார நிகழ்வு இன்று சிறப்பாக நடைபெற்றது.

### தோரணம் கட்டும் போட்டி

ஆலய நிர்வாகத்தின் ஆதரவுடன் ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் 5வது பிரிவு இந்த நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழாவில் கோலமிடுதல், தோரணம் கட்டுதல், மட்டைப் பின்னுதல், பொங்கலிடுதல் மலர் தொடுத்தல் ஆகிய நிகழ்வுகளோடு சிறார்களுக்கு வர்ணம் தீட்டுதல், மாறுவேடப் போட்டியும் நடை பெற்றன.

வட்டார மக்களிடையே அணுக்கமான ஒத்துழைப்பை வளர்க்கும் அதே வேளையில் பாரம்பரிய கலைகளை தொடர்ந்து கட்டிக் காக்கும் நோக்கில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினருமான எஸ்.பி. சரவணன் கூறினார்.



வர்ணம் தீட்டும் போட்டியில் வெற்றி பெற்ற சிறார்களுக்கு பரிசு வழங்குதல்

இங்கு நடத்தப்பட்ட நமது பண்பாடு சார்ந்த பத்து விதமான போட்டிகளில் சுற்று வட்டார மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்றார் அவர். கலாசாரப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சி என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இவ்விழாவுக்கு தாங்கள் சுமார் 15,000 வெள்ளியைத் செலவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கோவிட்–19 நோய்த் தொற்றுப் பரவலைக் கருத்தில் கொண்டு இந்நிகழ்வில் எஸ்.ஓ.பி. விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சகோதரத்துவத்தை வளர்ப்பதில் பாரம்பரிய விழாக்கள் உதவி



மலேசியாவில் இன சகோதரத்துவம் மற்றும் நட்புறவை வளர்ப்பதில் பாரம்பரிய விழாக்கள் பெரிதும் துணை புரிவதாக ஷா ஆலம் நாடாளுமன்ற உறுப்பினர் காலிட் அப்துல் சமாட் கூறினார்.

தொடக்க காலம் முதல் இத்தகைய விழாக்களை ஒன்றிணைந்து கொண்டாடும் மனப்போக்கு மலேசியர்களிடம் இருந்து வருவதாகவும் அவர் சொன்னார்.

அறுவடைத் திருநாளான பொங்கல் முன்பு அவ்வளவு சிறப்பாக கொண்டாடப்படவில்லை. எனினும், தற்போது பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் நோக்கில் இந்நிகழ்வு வெகு விமரிசையாக கொண்டாடப் பட்டு வருகிறது.

இது போன்ற விழாக்களை முன்பு தொடங்கி இப்போது வரை அனைவரும் ஒன்றாக கொண்டாடி வருகிறோம். இதன் மூலம் நாட்டிலுள்ள பல்லின மக்களிடையே சகோரத்துவத்தையும் நட்புறவையும் வளர்ப்பதற் குரிய வாய்ப்பு ஏற்படுகிறது என்றார் அவர்.

ஷா ஆலம், கெம் ரிம்பா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பொங்கல் கலை,கலாசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாரம்பரிய கலை, கலாசார போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய இந்த விழாவை ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் 5 வது மண்டலப் பிரிவு ஆலய நிர்வாகத்திடன் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடத்தியது.



இந்த நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்த ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர் எஸ்.பி. சரவணன் மற்றும் ஆலயத் தலைவர் டத்தோஸ்ரீ குணசேகரன் மற்றும் ஆலய நிர்வாகத்தினரையும் அவர் பெரிதும் பாராட்டினார்.

இந்த கென் ரிம்பா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தை காப்பாற்றுவதற்கு நடத்தபட்ட போராட் டத்தில் தாமும் பங்கேற்றதை காலிட் சமாட் தமதுரையில் நினைவுக்கூர்ந்தார்.

ஷா ஆலம் பாடாங் ஜாவா பகுதியில் அமைந்திருந்த இந்த ஆலயத்தை உடைப்பதற்கு கடந்த 2007 ஆம் ஆண்டு இறுதியில் அப்போதைய பாரிசான் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதோடு 2008 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிலாங்கூரில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கும் வழி வகுத்தது. இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட பாரம்பரிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு காலிட் சமாட் பரிசுகளை எடுத்து வழங்கினார். சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவும் இந்த நிகழ்வுக்கு சிறப்பு வருகை புரிந்தார்



# மிட்லண்ட்ஸ் பள்ளியில் மாணவர்களை அதிகரிக்க நடவடிக்கை



## முதலாம் ஆண்டு சேரும் மாணவர்களுக்கு சலுகைகள்

ஷா ஆலம் :–

இங்குள்ள மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கையில் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்நடவடிக்கையின் ஒரு பகுதியாக முதலாம் ஆண்டு சேரும் மாணவர் களுக்கு பள்ளிச் சீருடை, காலணி, புத்தகப் பை, நோட்டு புத்தகங்கள் மற்றும் எழுது பொருள்கள் இலவசமாக வழங்கப்படுவதோடு பெ.ஆ.சங்க கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அவர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது என்று பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் இளங்கோவன் முனியாண்டி கூறினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமரக்கூடிய ஐந்து நட்சத்திர தரம் கொண்ட மாநாட்டு மையம், நவீன தொழில்நுட்ப கற்றல் கற்பித்தல் வசதிகள், புறப்பாட நடவடிக்கைகளுக்கான அடிப்படை வசதிகள் ஆகியவை ஒருங்கே அமையப் பெற்ற நாட்டின் தலைசிறந்த தமிழ்ப்பள்ளி என்ற பெருமையை இப்பள்ளி தக்க வைப்பதற்கு ஏதுவாக மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதில் தாங்கள் தீவிரம் காட்டி வருவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது 155 மாணவர்கள் இப்பள்ளியில் பயின்று வரும் நிலையில் அந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பல்வேறு திட்டங்களை பெற்றோர் ஆசிரியர் சங்கம் வாயிலாக மேற்கொண்டுவருகிறோம். மாணவர்களுக்கு இலவச சிற்றுண்டி, முதலாம் ஆண்டு மாணவர் களுக்கு இலவசமாக பள்ளி உபகரணங்களை வழங் குவது போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தவிர்த்து சுற்று வட்டாரங்களில் மாணவர் சேர்ப்பு தொடர்பான பதாகைகளைப் பொருத்துவது ஆகியவையும் அந்நடவடிக்கைகளில் அடங்கும் என்றார் அவர்.

கடந்தாண்டு முதலாம் ஆண்டில் 35 மாணவர்கள் சேர்ந்தனர். இவ்வாண்டு மார்ச் மாதம் 21 ஆம் தேதி புதிய பள்ளித் தவணை தொடங்கவுள்ள நிலையில் இது வரை 22 மாணவர்கள் மட்டுமே பதிவு செய்துள்ளனர். பள்ளி தொடங்குவதற்குள் இந்த எண்ணிக்கையை 30 முதல் 40 ஆக அதிகரிக்க நாங்கள் இலக்கு கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பள்ளியின் சுற்று வட்டாரங்களில் வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது மற்றும் இப்பள்ளிக்கு பொது போக்குவரத்து வசதி இல்லாதது போன்றவை மாணவர் எண்ணிக்கை சரிவுக்கு காரணமாக விளங்குவதாகக் கூறிய அவர், போக்குவரத்து பிரச்சனைக்குத் தீர்வு காணும் விதமாக வேன் மூலம் மாணவர்களுக்கு போக்குவரத்து சேவை வழங்கும் முயற்சியில் சங்கம் ஈடுபட்டு வருகிறது.

இப்பள்ளியில் உள்ள பாலர் பள்ளியில் தற்போது 15 மாணவர்கள் பயின்று வரும் நிலையில் இப்பள்ளியை கல்வியமைச்சின் உதவியுடன் நடத்துவதற்கான முயற்சியில் பள்ளி நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது. இதன் வழி அடுத்தாண்டு மார்ச் மாதவாக்கில் இப்பள்ளி கல்வியமைச்சு ஏற்று நடத்துவதற்கான சாத்தியம் ஏற்பட் டுள்ளது.

மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும் புறப்பாட நடவடிக்கையிலும் தலைசிறந்து விளங்கி வருகின்றனர். அனைத்துலக நிலையிலான சதுரங்கம் மற்றும் அறிவியல் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட இப்பள்ளி மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக காலப்போகில் அடையாளத்தை இழந்து விடக்கூடாது என்பதே எங்களின் கவலையாகும்.

ஷா ஆலம் வட்டார இந்தியர்கள் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக்கு அனுப்புவதை உறுதி செய்வதில் தமிழ் ஆர்வலர்களும் சமூகப் பற்றாளர்களும் தங்களின் பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் இளங்கோவன் கேட்டுக் கொண்டார்.

# சிப்பாங் வட்டாத்தில் ஆற்று முகத்துவாரங்களில் 1,600 மரங்களை நடும் இயக்கம்



சிப்பாங்:–

அலை தடுப்பு பகுதிகளாக வலுப்படுத்தும் நோக்கில் இம்மாவட்டத் திலுள்ள இரு ஆற்று முகத்துவார பகுதிகளில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த 1,600 மரங்களை நடும் இயக்கம் மேற்கொள்ளப் படுகிறது. இன்று சுங்கை செப்பாங் பெசார், பந்தாய் பாசீர் பூத்தே பகுதியில் 1,000 ரிஸோபோரா வகை சதுப்பு நில மரங்கள் நடப்பட்ட வேளையில் நாளை பாகான் லாலாங் கடற்கரை பகுதியில் 600 கெத்தாப்பாங் மற்றும் ரூ வகை மரங்கள் நடப்படும்.

பல்வேறு உயிரினங்களின் வாழ்விடமாக விளங்கும் கடற்கரை பகுதியை மீட்டெடுக்கும் முயற்சியாக இத்திட்டம் அமல்படுத்தப்படுவதாக சிப்பாங் நகராண்மைக் கழகத் தலைவர் டத்தோ அப்துல் ஹமிட் ஹூசேன் கூறினார்.

இந்த மரம் நடும் இயக்கத்தின் மூலம் கடல் வாழ் உயிரினங்களின் உணவு ஆதாரத்தையும் பாதுகாக்க முடியும் என்பதோடு சுற்றுவட்டார மக்களின் குறிப்பாக மீனவர்களின் சமூக பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என்று அவர் சொன்னார். இந்த இரண்டு நாள் மரம் நடும் இயக்கம் சிலாங்கூர் வன இலாகா, மலேசிய ரிம்பாவன் கழகம், பாலாய் இக்திசாஸ் மலேசியா, மலேசிய புத்ரா பல்கலைக்கழக வனத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தகைய மரம் நடும் நடவடிக்கைகளின் மூலம் வட்டாரத்தில் சீதோஷண நிலையை சீராக வைத்திருக்க முடியும் என்பதோடு வெப்ப அதிகரிப்பையும் தடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். பருவ நிலை மாற்றம் காரணமாக கடல் மட்டம் உயர்ந்து வெள்ளப் பேரிடர்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

# ஆசியானில் வலுவான முதலீட்டு மையமாக தடம் பதிக்க சிலாங்கூர் இலக்கு-டத்தோ தெங்

ஷா ஆலம்:–

ஆசியான் பிராந்தியத்திலும் உலகளாவிய சந்தைகளிலும் வலுவான தடத்தைப் பதிக்கும் அதே வேளையில் இந்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள முதலீட்டாளர்களின் தேர்வுக்குரிய மையமாக சிலாங்கூர் விளங்குவதை உறுதி செய்யும் கடப்பாட்டையும் மாநில அரசு கொண்டுள்ளது என்று டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

விண்வெளி மற்றும் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்துறை ஆகியவை சிலாங்கூர் அரசு முன்னரிமை வழங்கும் முதன்மை துறைகளாக விளங்குவதாக முதலீடு மற்றும் வர்த்தக தொழில்துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினரான அவர் நியு ஸ்ட்ரேய்ட்ஸ் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஐ–சிட்டி நகரை இந்த அளவுக்கு வடிவமைக்க உதவிய ஐ–பெர்ஹாட் குழுமத்தின் தலைவர் டான் ஸ்ரீ லிம் கிம் ஹாங் போன்ற போன்ற தொழில்துறை மற்றும் தொலைநோக்குப் பார்வையாளர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எப்போதும் ஆர்வமாக உள்ளோம். ஐ–சிட்டியுடன் இணைந்து சிலாங்கூரில் ஸ்மார்ட் சிட்டியை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம். சிலாங்கூர் மாநிலத்தை இப்பிராந்தியத்தின் விவேக மாநிலமாக மாற்றும் ஸ்மார்ட் சிலாங்கூர் வியூகத்தின் ஒரு பகுதியாக இது விளங்குகிறது என்று அவர் குறிப்பிட்டார்.



சிலாங்கூரை இப்பிராந்தியத்தின் விவேக மாநிலமாக மேம்படுத் துவதற்காக மாநில அரசு குறிப்பிட்ட நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் டத்தோ தெங் சொன்னார்.

பசுமை தொழில்நுட்ப வளர்ச்சியில் நாங்கள் ஈடுபாடு காட்டி வருகிறோம். மலேசியாவில் பசுமைத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்கை ஆற்ற முடியும் என்று நம்புகிறோம். இந்நோக்கத்திற்காக ஐ–சிட்டியுன் அணுக்கமான ஒத்துழைப்பை நல்கவும விரும்புகிறோம். ஐ–சிட்டியின் பல்லாண்டு கால அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பின் வாயிலாக பயன்மிக்க வகையிலான ஒத்துழைப்பை பெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் அவர் மேலும் தெரிவித்தார்.

# மதிப்புமிகு விளையாட்டு நிகழ்வுகள்

## சிலாங்கூரின் கௌரவத்தை உயர்த்த உதவும் – கைரூன் ஓத்மான்

ஷா ஆலம் : –

அண்மையில் நடந்து முடிந்த 2022 ஆசிய குழு நிலையிலான பூப்பந்து போட்டி போன்ற மதிப்புமிக்க போட்டிகள் சிலாங்கூர் மாநிலத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபலமடையச் செய்யும்.

இத்தகைய நிகழ்வுகளின் வாயிலாக விளையாட்டுகளை பிரபலப்படுத்தும் அதேவேளையில் பல்லின, சமய மற்றும் கலாசார பின்னணியைக் கொண்ட மக்களை ஒன்றுபடுத்தவும் இயலும் என்று விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஒத்மான் கூறினார்.

சிலாங்கூர் பங்கிட் உணர்வின் அடிப்படையில் ஆசிய பூப்பந்து போட்டி போன்ற நிகழ்வுகளை நடத்துவதன் வழி விளையாட்டுகள் மீதான ஈடுபாட்டை அதிகரிக்கவும் மக்களை ஒன்றுபடுத்தவும் சிலாங்கூரின் பெயரை அனைத்துலக நிலையில் பிரபலப்படுத்தவும் இயலும் என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் தேதி தொடங்கி ஆறு நாட்களுக்கு நடைபெற்ற இந்த போட்டியில் எட்டு நாடுகளைச் சேர்ந்த 147 விளையாட்டாளர்கள் பங்கேற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். இப்போட்டியில் கலந்து கொண்ட நாடுகளில் ஜப்பான், தென் கொரியா, இந்தோனேசியா, இந்தியா, ஹாங்காங், சிங்கப்பூர், கசகஸ்தான் மலேசியா ஆகிய நாடுகளும் அடங்கும் என்றார் அவர். இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் வாகை சூடிய மலேசிய அணிக்கும் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற இந்தோனேசியாவுக்கும் தாம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் சொன்னார்.




# விளையாட்டுத் துறைக்கு எம்.பி.ஐ. நிதி ஒதுக்கீடு– விண்ணப்பிக்க அழைப்பு

பாங்கி : –

விளையாட்டு சார்ந்த திட்டங்களை ஏற்பாடு செய்வோருக்கு உதவ எம்.பி.ஐ. எனப்படும் சிலாங்கூர் மந்திரி புசார் கழகம் ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு நிதி தேவைப்படும் ஏற்பாட்டாளர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்று எம்.பி.ஐ. சமூக நிறுவன கடப்பாட்டுப் பிரிவின் தலைவர் அகமது அஸ்ரி ஜைனால் நோர் கூறினார்.

மாவட்ட அல்லது மாநில ரீதியிலான விளையாட்டுகளுக்கு செய்யப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விளையாட்டுத் துறைக்கு உத்வேகம் அளிக்கும் நோக்கில் எம்.பி.ஐ. இந்த திட்டத்தை அமல்படுத்துகிறது என்று அவர் சொன்னார். கடந்தாண்டில் மலேசிய சுக்மா போட்டிக்காக சிலாங்கூர் ரக்பி குழுவை தயார் படுத்துவதற்கும் மாநில அளவிலான வில்வித்தை போட்டியை நடத்துவதற்கும் எம்.பி.ஐ. 20,000 வெள்ளி செலவிடப்பட்டது என்றார் அவர்.

காஜாங் நகராண்மைக் கழக அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கி நேற்று வரை நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய வில்வித்தைப் போட்டியின் முதலாவது தொடர்நிகழ்வின் போது செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநில வில்வித்தை விளையாட்டாளர்களுக்கு ஏற்பாட்டு ஆதரவு வழங்குவது உள்பட இந்த ஆறு நாள் போட்டியை நடத்துவதற்கு எம்.பி.ஐ. 15,000 வெள்ளியை செலவிட்டது என்றும் அவர் சொன்னார்.

## ஜோகூர் மாநிலத் தேர்தல் :

# 56 தொகுதிகளில் 239 பேர் போட்டி

# 15 இந்தியர்கள் களம் காண்கின்றனர்

ஜோகூர் பாரு :–

ஜோகூர் மாநிலத்தின் 15 வது தேர்தல் வரும் மார்ச் மாதம் 12 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் 56 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மொத்தம் 239 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில் தேசிய முன்னணி, பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி, பெரிக்கத்தான் நேஷனல் மூடா, வாரிசான், பெஜுவாங் உள்ளிட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன.

தேசிய முன்னணியும் பெரிக்காத்தான் நேஷனல் கட்சியும் அனைத்து 56 தொகுதிகளிலும் போட்டியிடும் வேளையில் பக்கத்தான் ஹராப்பான் 30 தொகுதிகளிலும் பெஜுவாங் 42 தொகுதிகளிலும் பிகேஆர் 20 தொகுதிகளிலும் போட்டி யிடுகின்றன. சுயேச்சைகளாக 20 பேர் களம் காண்கின்றனர்.



மேலும் மூடா எனப்படும் மலேசிய ஜனநாயக ஐக்கியக் கூட்டணி 7 இடங்களிலும் வாரிசான் 6 இடங்களிலும் பார்ட்டி பங்சா மலேசியா 4 இடங்களிலும் புத்ரா கட்சி ஒரு இடத்திலும் பி.எஸ்.எம். எனப்படும் மலேசியச் சோசலிசக் கட்சி ஒரு இடத்திலும் போட்டியிடு கின்றன.

இத்தேர்தலில் மொத்தம் 15 இந்திய வேட்பாளர்கள் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துத் தேர்தலைச் சந்திக்கின்றனர்.

பூலோ காசா தொகுதியில் பி.கே.ஆர். கட்சி சார்பில் சி.சுப்பிரமணி போட்டியிடுகிறார். இத்தொகுதியில் நான்கு முனைப் போட்டி நடைபெறுகிறது.

கெமலா தொகுதியில் தேசிய முன்னணி சார்பில் மஇகா வேட்பாளரான என். சரஸ்வதி களம் காண்கிறார். இத்தொகுதியிலும் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது

பெக்கோ தொகுதியில் இரு இந்தியர்கள் போட்டியிடுகி ன்றனர். ஜசெக சார்பில் எம். கண்ணன் போட்டியிடும் வேளையில் வாரிசான் கட்சியைப் பிரதிநிதித்து ஏ.சந்திரச் சேகரன் களம் காண்கிறார். முன்னாள் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் எஸ்.ராமகிருஷ்ணன் இத்தொகுதியில் கடந்த முறை பி.கே.ஆர். கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

புக்கிட் நானிங் தொகுதியில் நடைபெறும் ஐந்து முனைப் போட்டியில் எஸ். ஜெகநாதன் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

மாச்சாப் தொகுதியல் சங்கரன் ரவிசந்திரன் மூடாக் கட்சியைப் பிரதிநிதித்துத் தேர்தலைச் சந்திக்கிறார்.

லாயாங் லாயாங் தொகுதியில் பெரிக்கத்தான் நேஷனல் சார்பில் பெர்சத்து கட்சியைப் பிரதிநிதித்து அழகேந்திரன் கிருஷ்ணன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இத்தொகுதியில் முன்னாள் கல்வியமைச்சரும் பக்கத்தான் மந்திரி புசார் வேட்பாளருமான டாக்டர் மஸ்லி மாலி பி.கே.ஆர். கட்சி சார்பில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலோ தொகுதியில் பாஸ் கட்சி சார்பில் (பெரிக்கத்தான் நேஷனல் கூட்டணி) செல்வேந்திரன் வேலு போட்டியிடுகிறார். தற்போது மஇகா வசமுள்ள காஹாங் தொகுதியைத் தக்க வைத்துக் கொள்ள நடப்புச் சட்டமன்ற உறுப்பினர் ஆர். வித்தியாநந்தன் போட்டியிடுகிறார்.

மஇகா வசமுள்ள மற்றொரு தொகுதியான தெங்காரோவில் நடப்பு உறுப்பினர் ரவீன் கிருஷ்ணசாமி தேசிய முன்னணி சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார்.

ஏழு முனை போட்டி நிலவும் திராம் தொகுதியில் அதிகமாக அதாவது மூன்று இந்திய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். பாலசுந்தரம் பெருமாள் மற்றும் ஜே. ஜெயச் சங்கர் ஆகியோர் சுயேச்சைகளாகவும் எஸ். கோபாலகிருஷ்ணன் பி.கே. ஆர். சார்பிலும் களம் காண்கின்றனர். கோத்தா இஸ்கந்தார் தொகுதியில் ஆர். அரங்கண்ணல் பி.எஸ்.எம். கட்சி சார்பில் போட்டியிடுகிறார். இம்மாநிலத் தேர்தலில் அக்கட்சி நிறுத்தியுள்ள ஒரே வேட்பாளர் இவராவார்.

புக்கிட்பத்துத்தொகுதியில் தேசிய முன்னணி சார்பில் மஇகாவைச் சேர்ந்த சுப்பையா சோலைமுத்து போட்டியிடுகிறார்.

# ஹரப்பான் கட்சியின் கட்சித்தாவல் எதிர்ப்பு மசோதா

## மார்ச் 24க்கு முன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்



கோலாலம்பூர்:–

பக்காத்தான் ஹராப்பான் மற்றும் அரசாங்கத்தின் விருப்பத்திற்கு ஏற்ப, நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி (ஆடிரு) கட்சித் தாவல் தடை மசோதா கொண்டுவரப்பட்ட வேண்டும்.

ஹரப்பான் தலைமைத்துவ கவுன்சில் இன்று ஒரு கூட்டறிக்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2.4 வது பிரிவையும் குறிப்பிட்டுள்ளது, இந்த மசோதா பாராளுமன் றத்தின் முதல் கூட்டத்தில், அதாவது மார்ச் 24 கு அல்லது அதற்கு முன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கீகரிக்க வேண்டும்.

பிகேஆர் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், டிஏபி பொதுச்செயலாளர் லிம் குவான் எங், அமானா தலைவர் முகமது சாபு மற்றும் கினாபாலு ஐக்கிய முற்போக்கு அமைப்பின் (யுபிகேஓ) தலைவர் டத்தோ ஸ்ரீ வில்பிரட் மேடியஸ் டாங்காவ் ஆகியோர் இன்று கூட்டறிக்கை வெளியிட்டனர்.

நேற்றைய தலைமைத்துவ கவுன்சில் வழக்கமான கூட்டத்தின் படி, ஜோகூர் தேர்தல் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பின்னர், போட்டியிடும் ஹராப்பான் வேட்பாளர்களின் தொகுதிகளில் சூறாவளி சுற்றுப்பயணங்களை நடத்த முடிவு செய்தது.

“இது நிலையான ஒரு ஜோகூர் மாநில அரசாங்கத்தை உருவாக்க நோக்கம் கொண்டதாகும். மேலும் தொற்று நோய்க்கு பிறகு ஜோகூர் மாநிலத்தை அபிவிருத்திக்கு உகந்த முறையில் தயார் படுத்த வேண்டிய தேவையை உணர்த்துகிறது என்றது.

இதற்கிடையில், தேர்தல் பிரச்சாரம் தொடங்கும் முன் பொருளாதார வளர்ச்சி, சமூக ஸ்திரத்தன்மை மற்றும் அரசியல் சீர்திருத்தம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய ‘ஜோகூர் பாங்கிட், மாஜு, பெர்மாருவா’ பிரச்சாரத்தின் கீழ் ஹராப்பான் தொடர் போராட்ட கொள்கையை தயாரிக்கவும் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாற்றம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை கருதி கடந்த 13 செப்டம்பர் 2021 அன்று அரசாங்கத்திற்கும் ஹராப்பானுக்கும் இடையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம், அத்துடன், கோவிட்–19 மீட்புத் திட்டம், நிர்வாகம், நாடாளுமன்ற சீர்திருத்தம், நீதித்துறையின் சுதந்திரம், எம்ஏ63 மலேசியா ஒப்பந்தம் வழிநடத்தல் குழுவை நிறுவுதல் போன்ற சவால்களை சமாளிப்பது என்றது அது.

## போர்ட் கிள்ளான், தஞ்சோங் பெலேபாஸ் துறைமுகம்

## கடந்த ஆண்டு உலகின் 15ஆவது பரபரப்பான துறைமுகங்களாகப் பட்டியலிடப்பட்டது




உலகின் தலைசிறந்த 20 துறைமுகங்களில் பட்டியலிடப்பட்டுள்ள போர்ட் கிள்ளான் மற்றும் தஞ்சோங் பெலேபாஸ் துறைமுகம் (PTP) ஆகியவை 1.364 கோடி மற்றும் 1.12 கோடி இருபது அடி சமமான யூனிட் (TEU) என்ற மொத்தக் கொள்கலன் அளவுடன் சிறந்த செயல்திறனைப் பதிவு செய்ய முடிந்தது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் சிலாங்கூர் உட்படப் பல மாநிலங்களைத் தாக்கிய பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போதிலும், போர்ட் கிள்ளான் அக் காலத்தில் செயல்திறன் சிறந்த சாதனை என்று போக்குவரத்து அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வீ கா சியோங் கூறினார். தஞ்சோங் பெலேபாஸ் துறை முகத்தைப் பொறுத்தவரை, முந்தைய ஆண்டின் செயல்திறனுடன் ஒப்பிடு கையில் 14 விழுக்காடு அதிகரிப் பைப் பதிவு செய்தபோது, கூறுகளின் எண்ணிக்கையும் அசாதாரணமாகக் கருதப்படுகிறது. "உலகின் 20 பெரிய துறைமுகங்களின் பட்டியலில், அவற்றில் இரண்டு, அதாவது போர்ட் கிள்ளான் மற்றும் தஞ்சோங் பெலேபாஸ் துறைமுகம் ஆகியவை 15 பரபரப்பான துறைமுகங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. மலேசியா போட்டித் தன்மையுடன் இருக்கிறது மற்றும் திறன் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளது என்பதை இந்தப் பதிவு காட்டுகிறது, ”என்று அவர் செவ்வாய்க்கிழமை கூறினார்.

இங்குள்ள கோலாலம்பூர் மாநாட்டு மையத்தில் 2022 ஆம் ஆண்டு மலேசியக் கடல்சார் வாரத்தை நிறைவேற்றிய பின்னர்ச் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் கூறுகளின் எண்ணிக்கையை நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து துறைமுக விரிவாக்கம் உட்பட, நாட்டில் உள்ள ஒவ்வொரு துறைமுகத்தின் திறனையும் அரசாங்கம் எப்போதும் கவனித்து வருவதாக வீ.கூறினார்.

## கியூபெக்ஸ் பொதுத்துறைக்குக் குறைந்தபட்சம்

## வெ.1,800 புதிய ஊதியப் பரிந்துரையை மீண்டும் வலியுறுத்தியது

கோலாலம்பூர்:–

பொதுச் சேவையில் உள்ள ஊழியர்களின் சங்கங்களின் காங்கிரஸ் (கியூபெக்ஸ்) மீண்டும் ஒருமுறை பொதுத் துறைக்கான புதிய குறைந்தபட்ச ஊதியமான வெ.1,800 ஐ மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தனது தரப்பு இந்த விஷயத்தைப் பிரதமரிடம் முன்பு எழுப்பியதாகவும், அரசாங்கம் மதிப்பிடுவதற்கு இந்த எண்ணிக்கை நியாயமானதாக இருப்பதாக அவர் கருதியதால், ஒரு மாதத்திற்கு RM1,800 சம்பளத்தை முன்மொழிந் ததாகவும் கியூபெக்ஸ் தலைவர் டத்தோ அட்னான் மாட் கூறினார்.

அதே நேரத்தில், பிரதமர் 12வது மலேசியா திட்டத்தின் (12MP) கீழ் நவம்பர் 27 அன்று அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் தெரிவித்தார். 2025 ஆம் ஆண்டளவில் குடும்ப வருமானத்தை சுஆ10,000 இல் வைப்பதன் மூலம் அதிக வருமானம் பெறும் நாடாக உயர்த்த அரசாங்கம் இலக்கு கொண்டுள்ளது.

"இருப்பினும், புதிய குறைந்தபட்ச ஊதியத்தை அரசாங்கமே மாற்றவில்லை என்றால், 12ஆஞ யின் கீழ் இலக்கை அடைய முடியாது" என்று அவர் பெர்னாமா டிவி வெளியிட்ட ’அரசு ஊழியர்களின் தலை விதியைத் தீர்மா னித்தல்’ என்ற தலைப்பில் நிருபர் நிகழ்ச்சியில் மெய்நிகர் விருந்தினராக இருந்தபோது கூறினார்.

மேலும், அரசு ஊழியர்களின் சம்பளம் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுஆய்வு செய்யப்பட வேண்டும் , கடைசியாக 2002–ம் ஆண்டு அரசு ஊழியர் ஊதிய முறை மறுஆய்வு செய்யப்பட்டது என்றும் அவர் கூறினார். “10 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதை அரசாங்கமே ஏற்றுள்ள போது இந்த ஆண்டு அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். "புதிய ஊதிய முறையானது அரசு ஊழியர்களின் வசதியான சம்பளத்தைப் பெறுவதற்கான தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும், இது குறைந்தபட்ச தினசரி செலவினங்களின் விலையுடன் ஒத்துப்போகிறது, இது கடந்த ஆண்டு முதல் பல மடங்கு அதிகரித்து வரும் பொருட்களின் விலையுடன் (விலைகள்) மாறியுள்ளது," என்று அவர் கூறினார்.



Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lo2 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.